தென்றல்

ஆசிரியர் – கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம் : 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை 15-2-58 சனிக்கிழமை | இதழ் 31

★

இராமனுதபுர மாவட்டத்தைச் சேர்ந்த குன்னக்குடியிலிருந்து காளுடுகாத்தான் செல்லும் குறுக்குப் பாதையில் ஈனாத வாழை, ஓடாத செக்கு, கூவாத சேவல், ஒற்றைக் கால் மண்டபம், வாழாத பெண்– என்று ஐந்து கல்சின்னங்கள் வருகின்றன. இவைகளில் வாழாதபெண்ணைப் பற்றிய கதை மிகவும் உருக்கமாகவும் உள்ளத்தைத் தொடும் வகையிலும் இருக்கிறது. அந்தச் சோகக்கதையில் வரும் ஒரு கட்டம் தான் பக்கத்தில் சித்திரமாகக்காணப் படுகிறது.

அழகான பெண் – மணமாகவில்லை. பெயர் குஞ்சரம். குடும்பத்தின் கௌரவத்திற்கேற்றுற் போல் அடக்கமாக வாழ்ந்தாள். சொத்து, சுகம், சுற்றம் – இவைகளுக்குக் குறைவில்லை. மலர்களில் மல்லிகையும், நகைகளில் மூன்றுகல் மூக்குத்தியுமே அவளைக் கவர்ந்திருந்தன. பார்வைக்கு அவள் அடக்கம் நிறைந்த குடும்பத்தைச் சேர்ந்தவளாகக் காணப்பட்டாள். தங்களுக்கென ஒரு வீர சரித்திரத்தைக் கொண்ட கள்ளர் வீட்டுப்பெண் என்ருல் யாரும் எளிதில் மதித்திடக் கூடிய வகையிலா இருப்பார்கள்!

அவளைப் பற்றிய உண்மைக்கதை அடுத்த இதழில் இடம் பெறுகிறது. சுவையான சிறுகதை. தென்னரசு எழுதுகிருர்.

★

அமெரிக்க ஐக்கிய நாடுகளைத் தவிர்த்து, மக்கள் நேரடியாக அரசாங்க நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் உலக ஜனநாயக நாடுகளுக்கு ஸ்விட்சர்லாந்து ஓர் அரிய எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அதன் விளக்கமே இந்தக் கட்டுரை.

சுவிட்சர்லாந்தில் நேரடி மக்களாட்சி!

இன்றைய ஸ்விஸ் நாட்டின் நேரடி மக்களாட்சியின் அங்கங்கள் "லாண்ட்ஸ் ஜெமிண்டி" என்றழைக்கப்படும் பண்டைய நகரசபைகளின் அடிப்படையில் எழுந்தவையாகும். 'லாண்ட்ஸ் ஜெமிண்டி' என்றழைக்கப்படும் இச்சபை இன்னும் ஆறு காண்டன்கள் அல்லது மாநிலங்களின் விதியை நிர்ணயிக்கும் மகத்தான சக்தியைப் பெற்றுத் திகழ்கிறது. இச்சபை, சாதாரணமாக ஏப்ரல் மாதக் கடைசி ஞாயிற்றுக்கிழமையன்று திறந்த வெளி அரங்கில் கூடி, பிரச்னைகளை விவாதித்து முடிவு செய்கிறது. இச்சபைக்கு, காண்டனின் அரசியல் அமைப்பை மாற்றவும், சாதாரணச் சட்டங்களை நிறைவேற்றவும், வரிவிதிக்கவும், காண்டன் ஆட்சிக்குழுவின் வேலைகளை மேற்பார்வையிடவும் அதிகாரமுண்டு. இந்த மக்கள் சபையில் காண்டனின் எந்தக் குடிமகனும் பங்கு கொள்ளலாம். இது பற்றியே பேராசிரியர் "புருக்ஸ்" என்பார், தற்போது ஆறு காண்டன்களில் இச்சபை, இயற்கையான - மிக முக்கியத்துவம் வாய்ந்த சபையாகவும். மக்களாட்சிக் கொள்கைக்கோர் இருப்பிடமாகவும் விளங்குகிறது என்று கூறியுள்ளார்.

இச்சபையின் சாதனைகளை விரிவுபடுத்தி நேரடி மக்களாட்சிப் பண்பை வளர்க்கும் ஒரு உயர்ந்த சாதனமாக அதனை ஸ்விஸ் மக்கள் பயன்படுத்தக்கூடும் என்று எண்ண இடமிருக்கிறது.

அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஏதாவது திருத்தம் வேண்டுமென்றால், அத்திருத்தங்கள் பெடரல் சட்ட சபையால் மக்களின் கருத்தையறிவதற்கு, மக்கள் மன்றங்களின் முன்பு வைக்கப்படும். இந்தத் திருத்தங்கள் சட்டமாவதற்கு முன்பு, அவை மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற வேண்டும். 1874-ம் ஆண்டு முதல் 1932-ம் ஆண்டுவரை பெடரல் சட்டசபை 42 முறை இதுவரை அரசியலமைப்புச் சட்டத்துக்குத் திருத்தங்கள் கொண்டுவந்துள்ளது. ஆனால் 33 முறைதான் மக்களும் காண்டன்களும் திருத்தங்களை ஆதரித்தனர். 1891-ம் ஆண்டு முதல் 50000 வாக்காளர்கள் சேர்ந்து அரசியலமைப்புச் சட்டத்துக்குத் திருத்தங்கள் கொண்டுவர வாய்ப்பளிக்கப்பட்டது. இந்த ஐம்பதினாயிரம் வாக்காளர்கள் தாங்கள் கொண்டுவர விரும்பும் திருத்தங்களின் நகலைப் பெடரல் சட்ட சபைக்கு அனுப்பியதும், அச்சபை அதனை நிராகரிக்க வேண்டுமானால் நிராகரிக்கலாம். அல்லது வேறொரு திருத்ததை மக்களிடைச் சமர்ப்பிக்கலாம். எவ்வாறாயினும் திருத்தங்களைக் கொண்டுவர முயலும் முதல் கட்டத்தில், அது மக்களிடைச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சில சமயங்களிற்றான் வாக்காளர்கள் கொண்டுவந்த திருத்தங்கள் வெற்றி பெற்றன. பொதுவாக, மக்கள், பெடரல் சட்டசபையின் தீர்ப்பையே ஏற்றுக்கொள்வர்.

பெடரல் சட்டசபையின் நடவடிக்கைகள்மீதும் பொது வாக்கெடுப்பு நடத்தப்படும். இவ்வாக்கெடுப்பு, 30000 வாக்காளர்களால், ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்ட, தொண்ணூறு நாட்களுக்குள் கோரப்பட வேண்டும். இந்தச் சமயங்களில் பெடரல் சட்டங்களை ஏற்றுக்கொள்வதோ, நிரர்கரிப்பதோ, மக்களினுடைய வாக்குகளைப் பொருத்ததாகும். இவ்விஷயங்களில் காண்டன்களின் விருப்பத்தை அறியவேண்டிய அவசியமில்லை. 1874-ம் ஆண்டு முதல் 1932-ம் ஆண்டுவரை பெடரல் சட்டசபை, தான் நிறைவேற்றிய 415 சட்டங்களில், மக்கள் வாக்கெடுப்பு தேவை என்று 40 சட்டங்களினமீது உத்தரவு பிறப்பித்தது. இந்த 40 சட்டங்களில், 14 சட்டங்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 26 சட்டங்கள் நிராகரிக்கப்பட்டன. மொத்தத்தில் 934% சட்டங்கள் பொது வாக்கெடுப்பின்றி சட்டமாக்கப்பட்டன. 3. 4% சட்டங்கள் மக்களாலும் காண்டன்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 3. 2% சட்டங்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டன. பெடரல் அரசாங்கத்தைப் பொருத்தவரை, பொது வாக்கெடுப்பு (Referendum) பெடரல் அரசாங்கத்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றி மட்டிலுமே எடுக்கப்படும். ஆனால் காண்டன்கள் இயற்றும் சாதாரண சட்டங்களின்மீதும் பொது வாக்கெடுப்பு நடைபெறலாம்.

எதிர்பார்த்ததற்கு மாறாக, ஸ்விஸ் அரசாங்கத்தில் மக்களின் பங்கு, அண்மையில் வெகு அதிகமாக வளர்ந்திருக்கிறது. இவ்வாறு பொது வாக்கெடுப்பில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை 1911-1920-ம் ஆண்டுகளுக்கிடையில் 56.6% ஆக இருந்தது. 1921-1930-ம் ஆண்டுகளில் இது 60.7% ஆக உயர்ந்தது. சமூக, பொருளாதாரப் பிரச்னைகள் குறிப்பாக அதிக வாக்குகளைப் பெறுகின்றன. 1931-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 78.1% மக்கள் பொது வாக்கெடுப்பில் கலந்துகொண்டனர். இந்தத் தொகையில் பெரும்பான்மையினர், வயது முதிர்ந்தவர்களின் இன்ஷூரன்ஸ் திட்டத்தை எதிர்த்து ஓட்டளித்தனர். 1922-ம் ஆண்டு டிசபர் மாதம் சோஷியலிஸ்டு கட்சி கொண்டு வந்த காபிடல் வரித் திட்டத்தின்மீது எடுக்கப்பட்ட பொதுவாக்கெடுப்பில் 86.3% மக்கள் கலந்துகொண்டனர். பொதுவாக, பெடரல் சட்டசபை, அரசியல் கட்சிகளைக் காட்டிலும், மக்கள் பிற்போக்குவாதிகளாகக் காணப்படுகிறார்கள். 1931-ம் ஆண்டில் பெடரல் சட்ட சபையால் அங்கீகரிக்கப்பட்ட வயது முதிர்ந்தவர்களின் இன்ஷூரன்ஸ்திட்டத்தை மக்கள் நிராகரித்தனர். 1926-ம் ஆண்டில் கோதுமை உற்பத்தி, விற்பனை இவைகளின்மீது அரசாங்கம் ஏகபோக உரிமை செலுத்தும் அதிகாரத்தைப்பற்றிய சட்டத்தை (எல்லா அரசியல் கட்சிகளும் தங்களின் ஆதரவை அளித்தபோதிலும்) மக்கள் மன்றம் அதனை நிராகரித்தது. 1923-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒரு சிறு பிராந்தியம்பற்றிய தகராறில் பிரான்ஸ் நாட்டுடன் ஸ்விஸ் அரசாங்கம் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மக்கள் நிராகரித்தனர். ஒரு நாட்டிற்கும் மற்றொன்றிற்குமிடையே செய்யப்படும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்தின்மீது பொது வாக்கெடுப்பு எடுத்தது இதுவே முதல் தடவையாகும். இந்த முறை 1921-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின்மூலம் புகுத்தப்பட்டது. சமூக இன்ஷூரன்ஸ் திட்டம், பெடரல் அரசாங்கத்தைப் பலப்படுத்துவதுபோன்ற முக்கிய பிரச்னைகளில் மக்கள் தங்கள் பேராதரவை நல்கினர் எனினும், தனிப்பட்டவர்களின் சலுகைகள் அவர்களுடைய சுதந்திரம்- இவைகளைப் பொருத்தவரையில் மிகுந்த அக்கறையைக் காட்டத் தவறவில்லை. நேரடி மக்களாட்சியின்மூலம் சோஷியலிஸ்ட் சமுதாயத்தை நிறுவமுடியும் என்ற கொள்கைக்கு ஸ்விஸ் நாட்டு அரசியல், நம்பிக்கை அளிப்பதாக இல்லை.

பொறுமை உணர்ச்சியும், ஒத்துழைப்பு மனப்பான்மையும் ஸ்விஸ் அரசாங்கத்தின் சீரிய அம்சங்களாகும். தீவிர வலது சாரிக் கொள்கையினருக்கோ அல்லது தீவிர இடது சாரிக் நாட்டு அரசியல் அமைப்புமுறை கொள்கையினருக்கோ ஸ்விஸ் நடைமுறைக்கு ஒவ்வாததுஎன்ற எண்ணத்தையே எழுப்பும். ஸ்விஸ் அரசியலமைப்பு மற்ற நாடுகளில் உள்ளதைப்போன்ற கட்சிப் பூசல்கள் குழப்பங்கள் இவைகளுக்கு இடமளிக்கவில்லை. இதோடு மதத்துறையில் தீவிர சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கும் ஸ்விஸ் அரசியலமைப்பில் இடம் கிடையாது. ஆனால் ஸ்விஸ் நாட்டு அரசியல் அமைப்புச் சட்டம், மக்களுக்கு, நிலையான சட்டசபைக்குமட்டுமின்றி மக்களுக்கும் உட்பட்ட ஒரு சிறந்த ஆட்சி முறையை நல்கியிருக்கிறது.

—கோ. கோதண்டராமன்

திருமணம்

1-2-58ம் நாள் சனியன்று காலை 10 மணிக்கு உயர்திரு புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களின் தலைமையில் தோழர் மு. வசனப்பித்தன்–சுசிலா திருமணம் மதுரை பழநி டாக்கீசில் நடைபெற்றது. அதுபோது எஸ். முத்து, சி. பி. சிற்றரசு, டாக்டர் அருணாசலம், வக்கீல் பார்த்தசாரதி, திரு. முத்துக்குமார், திருமாறன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். திரு. எம். ஜி. ஆர். அவர்கள் மணமகளுக்கு இரு மோதிரங்களை அன்பளிப்பாகத் தந்தார். மற்றும் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அன்பழகன், சம்பத் எம். பி. செல்வராசு எம். எல். ஏ, என். வி. நடராசன் இன்னபிற கழக முன்னனியினரிடமிருந்து ஏராளமான வாழ்த்துக்கள் வந்தன. திரு. வெ. பகவதி நன்றி கூறினர்.



தேனும்பேட்டையில் அமைச்சர்களுக்கு தமிழ்ப்பள்ளி!

கடந்த ஒரு வார காலமாக சென்னை சட்ட மன்றத்தில் வாக்கு வாதங்கள் பலமாக நிகழ்ந்து வருகின்றன. காங்கிரஸ் மந்திரிகளும், காங்கிரஸ் அங்கத்தினர்களும் திணறுகிறார்கள். கவர்னர் உரையில் குறிப்பிடத் தகுந்தது எதுவும் இல்லை; தலையணை உறையைப்போல் அதுவும் ஒரு கதர் 'உறை'தான் என்பதை தி. மு. க. சட்ட மன்ற உறுப்பினர்கள் நிரூபித்துக் காட்டிவிட்டார்கள். பேசாத-பேசிப் பழக்கமில்லாத காமராசரைக் கூட, நமது உறுப்பினர்களின் கேள்விக்கணை ஒரு தடவை முடுக்கி விடச் செய்திருக்கிறது. காமராசரும் இந்த முறை பேசியிருக்கிறார்! ஆச்சரியம்! நாட்டுக்கு இது புதிய சேதி!

அண்ணா அவர்கள் அமைச்சர்களுக்குஎதிரேஉட்கார்ந்துகொண்டு உடனுக்குடன் எழுந்துபதில்சொல்லி அமைச்சர்களை அடக்கியிருக்கிறார்-பல முறை!

காங்கிரஸ் அங்கத்தினர்களில் வெகு பேர் தங்களை 'பிரகஸ்பதி'கள் என்று காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

'திராவிடக் கூட்டாட்சியில் எல்லாம் கலந்த மொழி இருக்குமா?' என்று ஒரு 'தேசீயம்' கேட்டிருக்கிறது! அந்த அங்கத்தினர், இது கேட்டதே ஆச்சரியப்படக்கூடியது தான்! ஏனென்றால், படிப்பு, ஆராய்ச்சி, எழுத்து-இவைகளுக்கும் அவருக்கும் வெகு தூரம்! வெட்கக்கேடு! இவர்களெல்லாம் சட்ட சபையிலே பேச வந்தவர்களல்ல! மொத்த வியாபாரங்களுக்கு தரகு பிடிக்க வந்தவர்கள்!

★

தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக வந்துவிட்டது என்று சொல்லப்படுகிறது. 'தேசியத்தம்பிரான்'கள் தெருவெல்லாம் முழக்கமிடுகிறார்கள்! சென்னை-காங்கிரஸ் மந்திரி சபையில் உள்ளவர்களெல்லாம் தமிழில் தனித் தகுதி பெற்றுவிட்டவர்கள் போலவும், அவர்களுடைய முயற்சியால்தான் தமிழ் ஆட்சி மொழியாக வந்துவிட்டதுபோலவும் பேசுகிறார்கள். சென்ற வாரம் சட்ட மன்றத்தில் தமிழர்கள் வெட்கப்படக்கூடிய சம்பவம் ஒன்று நடந்திருக்கிறது. தி. மு. கழக உறுப்பினர்ஒருவர் 'முன்மொழிகிறேன்' என்ற வார்த்தையை ஒரு இடத்தில் உபயோகித்தார். உடனே மந்திரி வெங்கட்ராமன் எழுந்து, 'முன் மொழிகிறேன்' என்றால் யாருக்கும் புரியாது, 'பிரரேபிக்கிறேன்' என்றால்தான் எல்லோருக்கும் புரியும் என்று சொல்லியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாகிவிட்டதாம்—'ஜால்ரு' போடுகிறார்கள்!

வெங்கட்ராமன்-அவருக்கு நெடு நாட்களாகப் பழகிப் போன 'தார்ப்பாச்சு' முறைப்படி உடையை உடுத்திக்கொண்டு சட்ட சபைக்கு வந்து இந்தப் பதிலைச் சொன்னால் நியாயமுண்டு! பிரரேபிக்கவாம்! மந்திரி சொல்கிறார்! இதையெல்லாம் பார்க்கும்போது தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு ஒரு மனுப் போடலாம்போல் தோன்றுகிறது.

தமிழ் தெரியாத தமிழ்நாட்டு மந்திரிகளுக்கு, தமிழ்போதிக்கவும்முறையாகப் பேசத் தெரியாத காங்கிரஸ் எம். எல். ஏக்களுக்கு பேசக் கற்றுக் கொடுக்கவும், தேனும்பேட்டை காங்கிரஸ் அலுவலகத்தில் இரவு 7 மணிக்குமேல் தினசரி இரவுப் பள்ளி நடத்தும்படி காங்கிரஸ் தலைவரைக் கேட்டுக்கொள்கிறோம். காங்கிரசால் தமிழகத்திற்கு ஏற்படும் அவமானம் காங்கிரசுக்கு அல்ல! தமிழ்நாட்டுக்குத்தானே!

★

பண்டித நேரு அவர்கள் சென்னை வந்தபோது சென்னையில்நடைபெற்ற குழப்பங்களுக்கு யார் காரணம்—என்று நமது கழக உறுப்பினர்கள் அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். எந்தக் கேள்விக்கும் அமைச்சர் பக்தவத்சலம் நேர்மையோடு, பொறுமையோடு பதில் சொல்லவே இல்லை.

செத்தவர்கள் நெறிசலில் செத்தார்களாம்! 'அரியாயப் புத்திசாலி' சொல்லுகிறார். நெறிசலில் சாகிறவர்கள் யாரும் காயம்பட்டுச் சாகமாட்டார்கள்! நசுங்கிச் சாகக்கூடும், மூச்சுவிடமுடியாமற் சாகக்கூடும்! ஆனால் சென்னையில் செத்தவர்கள் எப்படிச் செத்தார்கள்! அடிபட்டுச் செத்தார்கள்!

இது சம்மந்தப்பட்ட வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது. ஆனால் மந்திரி தி. மு. கழகத்தினரைக் குற்றவாளிகள் என்று முடிவு கட்டிக் கொண்டே பேசியிருக்கிறார். அண்ணா பன்முறை அமைச்சருக்கு 'சுய நினைவு' உண்டுபண்ணியிருக்கிறார். இருந்தாலும் அமைச்சர் அதிகார போதையில் நிதானம் தவறியே பேசியிருக்கிறார்!

போலீஸ் இலாகாவைப் பாராட்டுகிறாராம்! ஏனென்றால் இவர்தான் போலீசுக்கு மந்திரியாம்! போலீஸ் மந்திரி என்றால் போலீஸ் இலாகாவின் 'கரக' ஆட்டத்தைக் குறைப்பதற்காக மக்கள் தேர்ந்தெடுத்திருக்கும் ஒரு 'இதயமுள்ள மனிதர்' என்றுதான் பொருள்! ஆனால் பக்தவத்சலம் மந்திரியாகப் பேசவில்லை! அவருக்கு ஒரு காக்கிச் சட்டையைப் போட்டு, கையில் குண்டாந்தடியைக் கொடுத்துவிட்டு அவரைக் கூண்டிலேற்றி விசாரித்தால் எப்படிப் பேசுவாரோ அப்படியே பேசியிருக்கிறார்! அதாவது **'நான் போலீஸ் மந்திரியல்ல! ஐ. ஜி.க்குமேல்** ஒரு 'பெரிய ஐ. ஜி!' என்று சொல்வது போலிருக்கிறது மீஞ்சூரார் பதில்! மக்களுக்கும் போலீசுக்கும் இடையிலேயே உள்ளவராகவே அவர் பேசவில்லை, போலீஸ் அதிகாரியாகவே சட்ட சபையில் நடந்துகொண்டிருக்கிறார். இது என்ன காலத்திற்கோ! வெள்ளைக்காரன் காலத்தில் போலீஸ்காரர்கள் மிருகத்தனமாக நடக்கிறார்கள் என்று குற்றம்சாட்டப் பெற்றது. இப்பொழுது மக்கள் சர்க்கார் நடைபெறுகிறது. இப்போதும் அப்படி நடக்கக்கூடாது என்பதற்காகவும், மக்கள் நமது மக்கள், ஆகவே போலீசார் மக்களிடத்தில் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவுமே, ஒரு வெள்ளைச் சட்டைக்காரரை போலீஸ் மந்திரியாகப் போட்டோம். ஆனால் அவரோ, 'சட்டை வெள்ளைதான்-சடலம் போலீஸ்'என்கிறார். 'டயர்; கியர்' என்று அன்று காங்கிரஸ்காரர்கள் 'கயறு' திரித்தார்கள்! இவர் 'உயிரை'யே வாங்குகிறார்! ★

இராமநாதபுரம் மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

பிப்ரவரி 22, 23 (சனி, ஞாயிறு) நாட்களில்

தேவகோட்டை—வள்ளுவர் திடலில்
மஜீது அரங்கில் நடைபெறும்.

தலைவர் :
க. அன்பழகன் எம். ஏ. எம். எல். ஏ.

திறப்பாளர் :
இலட்சிய நடிகர்
எஸ். எஸ். இராசேந்திரன்

அறிஞர் **அண்ணா,**

நாவலர் **நெடுஞ்செழியன்**

மற்றும் முன்னணித் தோழர்கள் கலந்துகொள்வர்.

முதல் நாள் :	இரண்டாம் நாள் :
22-2-58 சனி இரவு	**23-2-58 ஞாயிறு இரவு**
மு. கருணாநிதி நடிப்பதும், புதுமை நாடக மன்றத்தார் அளிப்பதுமான **'உதய சூரியன்'** நாடகம்	தோழர் **நாகூர் அனிபா** குழுவினருடன் இசைவிருந்து

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம் :
ரூ. 5, 3, 2. பெண்களுக்கு அணா 8.

இ. ல. ம. சவுந்தரபாண்டியன்,
வ. கு. தலைவர்

இராம. வெள்ளையன்,
மா. குருசாமி
செயலாளர்கள்

நவமார்க்கண்டேயன் — பொருளாளர்

இதுதான் திராவிடநாடு

- 18 -

கா. அப்பாதுரையார்

தொல்காப்பியம் அரங்கேற்றிய போது அதை அவைத் தலைவராயிருந்து கேட்ட அதங்கோட்டாசான் குடி இன்னும் அதங்கோட்டாசான் என்ற பெயருடனே, அந்தக் குடியினால் பெருமை பெற்ற பெயருடைய ஊரிலே— திருவதங்கோட்டிலே— உள்ளது. இது இன்றைய குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலுக்கும் இரணியலுக்கும் இடையே உள்ளது. திருவாங்கூரின் பழந் தலைநகர் இதுவே—திருவாங்கூருக்கு அப்பெயர் தந்ததும் இந்த அதங்கோடே! தொல்காப்பியருக்கு ஆசிரியராயிருந்த புலவர் பெயரால்தான் கேரளத்தின் ஒரு பகுதியாகிய திருவாங்கூர் இன்னும் அழைக்கப்படுகிறது.

திராவிடம் என்ற சொல்லை மறுத்தால், மறந்தால், மலையாளம் சிறு மலையாளமாய், கேரளம் தேய்ந்த, தேயும் அடிமைக் கேரளமாய்இருக்க முடியுமேயன்றி கடம்பரைக் கடற்படையால் வென்ற சேரர் பரம்பரையாய், உண்மைத் தேசியக் கேரளமாய் நில்லாது.

மலையாளத்துக்குக் கூறியதே ஆந்திரத்துக்கு அமையும். உண்மையில் இன்றைய ஆந்திரம் 'ஆந்திரம்' என்ற பெயர் கூறவே வெட்கமடைய வேண்டும். ஆந்திரப் பேரரசர் ஆண்ட விசால ஆந்திரம் இன்றைய கட்டெறும்பு ஆந்திரமுமல்ல, அடிமை ஆந்திரமுமல்ல—இன்றைய இந்தியாவில் பெரும் பகுதியையும் பர்மா முழுவதையும் மலாயாவில் ஒரு பகுதியையும் உட்கொண்டதாகும். முக்கலிங்கமாண்டவர் (திரிசலிங்காதிபதி) முக்கடல் மன்னர் (த்ரிசமுத்ராதிபதி) என்ற பெயர்கள் பட்டங்கள் அவர்கள் பெருமை எல்லையைமட்டுமன்றி, வீழ்ந்த வகையையும் (சமஸ்கிருதப் பட்டங்களையும்) ஒருங்கே சுட்டிக் காட்டும்.

கன்னடத்தின் செய்தியும் இதுவே.

கன்னட நாடு என்று இன்றுகூறப்படும் பகுதி முழுவதும் சேலம் கோயமுத்தூர், நீலகிரி மாவட்டங்களும் சேர்ந்ததுதான் பண்டைத் தமிழரின் கொங்கு நாடு. கன்னடம் என்பது கொங்குத் தமிழே. பழங் கன்னடப் புலவர்கள் கன்னட நாட்டெல்லையை காவேரி முதல் கோதாவரிவரை என்று கூறியது இதனாலேயே. தெலுங்கர் 'திராவிடம்' என்ற சொல்லை மறந்ததனால், வட எல்லையில் ஒரியாவைமட்டுமன்றித் தெலுங்கரும் திராவிடப் பழங்குடி மொழியினரும் வாழும் கஞ்சம், விசாகபட்டின மாவட்டங்களையும் வடவரிடம் கோட்டைவிட்டதுபோலவே, கன்னடியரும் வட திசையில் தம் எல்லையின் பெரும் பகுதியை வடவருக்குக் கோட்டைவிட்டுள்ளனர்.

தெலுங்கர், கன்னடியர் பகுதிகளில் திராவிட இயக்கத்தை நம் கன்னடத் தாய்மொழி கொண்ட பெரியார் பரப்பியிருந்தால், தெலுங்கர், கன்னடியர் 'திராவிடம்' என்ற சொல்லைப் போர்க் குரலாகக்கொண்டிருந்தால், வடதிசையில் வளமான விந்திய மலைப் பகுதிகளைக் கையிழந்திருக்கமாட்டார்கள்.

நீதிக்கட்சிக் காலத்தில் மராத்தியர்கூடத் தென்னாட்டு இயக்கத்தில் பங்குகொண்டிருந்தனர். தேசியப் பெயரால் பிற்போக்காளர் செய்த சூழ்ச்சியால் அவர்கள் விலகி நின்றதாலேயே, சிவாஜி பரம்பரையினர், சிவாஜியையே தேசிய வீரத்துக்கு இலக்காக, 'இராஷ்டிரம்' என்ற சொல்லையே தேசியத்துக்குரிய இந்தியச் சொல்லாகக் கொண்ட 'தேசியத்தில் இன்று அவர்கள் உரிமை கேட்டு அலமருகின்றனர். அவர்கள் திராவிட இனக் கலப்பே அவர்களை வீரராக்கிற்று—வடவர் அவர்களை ஒதுங்கும்படி செய்வதும் அதுவே.

திராவிடம் என்ற சொல் தமிழர்க்கு மட்டுமன்று, தென்னாட்டவர் நிதி—வருங் காலத்தில் ஆசியாவுக்கே—உலகுக்கே புத்தூக்கமும் புது மலர்ச்சியும் ஊட்டவல்ல சொல். தேய்ந்த தமிழகத்தின் தேய்வை, அடிமைத் தமிழகத்தின் அடிமையை, வரலாறறியாத, பண்பறியாத தமிழகத்தில் இருட்கால நிலையை அணைத்துக் கொள்கிறவர்கள் வாதத்திற்குள் புகுமுன், அவர்கள் மன இருள் காட்ட இவை போதியவை.

திராவிடம்! வெள்ளைக்காரன் உபயோகித்த, உற்பத்தி செய்த பெயராயிற்றே! அதை ஏன் நாம் நம் பெயராகச் சூட்டிக்கொள்ள வேண்டும்? என்று கேட்பவர் உண்டு. வெள்ளையன் உருவாக்கிய பாரத தேசியத்தை. அவனுக்குமுன் என்றும் ஒன்றாக இயங்காத மாநில ஒருமைப் பாட்டை, ஏக இந்தியாவை தம் புதுத் தேசியமாகக் கொள்பவர்கள் கேட்கும் கேள்விதான் இது. அதுமட்டுமோ? அந்த ஏக இந்தியாவைமட்டுமன்றி அந்த வெள்ளையன் பிரித்த பிரிவினையையும் ஏற்று பிரிக்கப்பட்ட புத்தம் புதிய இந்தியக் கூட்டுறவையும் தம்முன்னோர் வழிச் சொத்தாகக் கொண்டு பாரதம்என்ற பெயர் சூட்டியவர்கள்தான் இக் கேள்வியாளர்.

தவிரத் திராவிடம் என்ற பெயர் வெள்ளையன் அளித்த பெயரல்ல என்பதை அவர்கள் அடுத்த கேள்வியே காட்டுகிறது. திராவிடம்! ஆரியப் பையன் நம் இனத்தை இழிவாகக் கருதி வசைபாடி அளித்த பெயரையா நாம் ஏற்பது! 'ஓடி வந்தவர்' 'திருடர்,' 'திராவைகள்,' 'பஞ்சை'கள் என்றல்லவா சமஸ்கிருதத்தில் அதற்குப் பொருள்! அந்தச் சொல்லை காதால் கேட்டாலே காண கடூரமாய் இருக்கிறதே!

இது பகைவன் என்று ஆரியனை ஒப்பியழைக்கும், சில சமயம் அயலான் என்று மனமாரக் கூறிக் கொண்டே ஆரியர் பக்கமாக நின்று இன உரிமை விற்று வயிறு வளர்க்கும் விபீஷணாழ்வார்கள் பேச்சு, ஆனால் திராவிடம் என்ற சொல் வெள்ளையரால்மட்டுமல்ல, சமஸ்கிருத கால ஆரிய நாட்டவர் வழக்கிலும் அது இருந்து வந்தது என்பதை நினைவூட்டுகிறது. கி. பி. 7-ம் நூற்றுண்டில் வாழ்ந்த குமாரிலன் தென்னக மொழி அல்லது மொழிகளைத் திராவிட ஆந்திர பாஷா என்று கூறுகிறான். அதே நூற்றுண்டில் கிட்டத்தட்ட கி. பி. 640-ல் சீன யாத்திரிகன் யுவான் சுவாங் காஞ்சிக்கு வந்து அங்கே ஆண்டுக் கணக்கில் தங்கியிருந்தான். அவன் காஞ்சியை உட்கொண்ட தென்னாட்டைத் திராவிடம் என்ற பெயராலேயே அறிந்து வழங்கியுள்ளான். இது தேவார காலத்துக்கே முற்பட்ட பழமை வாய்ந்த வழக்கு என்பதை இது காட்டுகிறது. புராணங்களில் மிகப் பழமை வாய்ந்தவற்றில் 'திராவிட நாடு' திராவிடத்து அரசர் செய்திகள் பல கூறப்படுகின்றன. பாரத இராமாயணங்களிலும் அதற்குமுற்பட்ட ஏடுகளிலும் சில சமயம் தமிழகப் பகுதியும் மிகப் பல சமயம் வட ஆந்திரப் பகுதியும் திராவிடம் என்று சுட்டப்பட்டுள்ளது. கி. மு. 2-ம் நூற்றுண்டில் வாழ்ந்த சாரவேலன் திராவிட அரசர் மூவரை வென்றதாகக் குறிக்கிறான்—இவர்கள் சேர சோழ பாண்டியராகிய பண்டைத் தமிழக மூவேந்தர்களேயாவர்.

இந்த வழக்குக்கூட ஆரியர் வழக்குத்தான் என்று வலிந்து தனித் தமிழ் வெறியர் வேடமிட்டுக் கூத்தாடுவர் வீடண் படை வீரர்கள். 'திராவிடர்' என்ற பெயர் ஆரியரிட்ட பெயரல்ல, ஆனால் வாதத்துக்காக அவ்வாறே வைத்துக்கொண்டார், இந்தியாவுக்கு இந்தியா என்ற பெயர் யார் கொடுத்தது யார் என்று அவர்கள் தம்மைத் தாமே கேட்டுக்கொள்ள மறுப்பவர் ஆகின்றனர். தமிழ் இலக்கிய வழக்கிலோ நிகண்டிலோ இந்நாளைய அகர வரிசையிலோகூட அப்பெயர் காணமுடியாது. 'இந்தியா' 'இந்து' என்ற இரு சொற்களையுமே ஆங்கில அகராதி, பழய அரபு பாரசீக அகராதி, பழய கிரேக்கர் வழக்கில் காணலாமேயன்றி, வேறு எந்த இந்திய மொழியின் இலக்கியத்திலோ நிகண்டிலோ; அகராதியிலோ-சமஸ்கிருத இயக்கத்திலோ நிகண்டிலோ, அகராதியிலோகூட இன்றும் காண முடியாது. சமஸ்கிருதத்தில் இந்தியா என்று எழுத்து வடிவில் எவரும் இதுவரை எழுதியது கிடையாது என்பதுகூடக் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் அத்தகைய வழக்கு இல்லாததனாலேயே 'இந்தி' மொழியாளர் முதலிய வட இந்தியர் இன்னும் 'இந்தியா' என்று கீழ் திசை வழக்கில் எழுதாமல் 'இண்டியா' என்று ஆங்கில ஒலிப்பு முறைப்படி எழுதுகின்றனர்.

அதுமட்டுமோ! இந்தியா, இந்து, இந்தி மூன்றையுமே கீழ்திசை முகமதியர் ஹிந்த, ஹிந்து, ஹிந்தி என்று குறித்தனர். இரு சொற்களில் மட்டும் கீழ்திசை அயலார் வழக்கைப் பாரதம் ஏற்று, மாநிலப் பெயரில் ஐரோப்பிய வழக்கையே இந்தியா என்று ஏற்றுள்ளது.

திராவிடம் கீழ்திசை ஆரியர் வழக்கானாலும்கூட, அது மேலை ஐரோப்பியர் வழங்கிய இந்தியா என்னும் பெயரைவிடச் சிறந்தது. பழமையானது ஆகும். ஆனால் அது ஆரியர் வழக்கிலில்லை.

தாயுமானவர் பாடல் தமிழ் மொழியைத் திராவிடம் என்று குறித்துள்ளது. சைவ சித்தாந்த நூலாகிய சிவஞான போதத்திற்குச் சிவஞான யோகிகள் இயற்றிய உரை சமஸ்கிருத வழக்கிலும் தமிழ் வழக்கிலும் ஒருங்கே திராவிடமாபாடியம்என்றே வழங்கப் பெறுகிறது. தொல்காப்பிய உரையாசிரியர்கள் தமிழையும் தென்னக மொழிகளையும் சேர்த்துத் திராவிட மொழிகள் என்று குறித்துள்ளார்கள்.

மிகப் பழங்காலத் தமிழர் தமிழ் என்ற சொல்லையே நாம் வழங்கும் தனி மொழிப் பொருளில் வழங்காமல் எல்லாத் திராவிட மொழிகளையும் சேர்த்து ஒருங்கே குறிக்கி வழங்கியுள்ளனர். தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் முதலில் 'கொடுந் தமிழ்'கள் என்றே வழங்கப்பட்டு, அதன்பின் தெலுங்குத்தமிழ், மலையந்தமிழ், கன்னடத்தமிழ் என்று நாட்டுப் பெயருடன் குறிக்கப்பட்டு, அணிமைக் காலத்திலேயே இறுதிச் சொல் கலாய் நிலையாய் மறைவுற்று, கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்று கூறப்பட்டது.* அத்துடன் இன்னும் தெலுங்கு இலக்கிய வாக்கில் 'ஆந்திரம்' என்ற சொல் சமஸ்கிருதம் கலந்த தெலுங்குக்கும், தெலுங்கு என்ற சொல்தூயதெலுங்கு அதாவது திராவிடத் தெலுங்குக்கும் வழங்கப்படுகிறது.

தொடரும்

எங்கும் கிடைக்கும்.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 4. ‖ 15—2—58 ‖ இதழ் 31

செட்டிநாடு சென்று வருவோம் !

வளம்குன்றிய பகுதி, பஞ்சமும் பட்டினியும் நிறைந்த மாவட்டம் என்றுதான் இராமனுதபுர மாவட்டத்தைப் பற்றி குறிப்பிடும்போதெல்லாம் அனைவருமே சொல்லுகிருர்கள். மருது சகோதரர்கள் போராட்டம், பாளையக்காரர்கள் நடத்திய புரட்சி இவைகளில் எதைப்பற்றி எழுத நேர்ந்தாலும், பேச வாய்ப்பு ஏற்பட்டாலும், எழுதத் தெரிந்தவர்களும், பேசத் தெரிந்தவர்களும், இராமனுதபுர மாவட்டத்தின் 'வறட்சி'யைப் பற்றித்தான் முதலில் எழுதுகிருர்கள். போகட்டும்! ஆனல், இராமனுதபுர மாவட்டம் மொத்தத்தில் எவ்வளவு வளம் குன்றியதாகக் கருதப்படுகிறதோ, அந்த அளவுக்கு அதிக வளத்தையும், செல்வச்செழிப்பையும் கொண்ட செட்டிநாட்டின் முக்கால் பகுதி அந்த இராமனுதபுர மாவட்டத்தில்தான் மூழ்கி இருக்கிறது என்பதை மற்றவர்கள் மறந்துவிட நியாயமில்லை. வடக்கே தொண்டிக் கடற்கரையையும் சிவகங்கையையும் எல்லைகளாகக் கொண்டு தெற்கே திருச்சி மாவட்டம் வரை செட்டிநாடு பரவி நிற்கிறது. தமிழரின் பண்டைக் கலாச்சாரத்திற்கும், கட்டட அமைப்புகளுக்கும் செட்டிநாடு பேர்போனதாகத் தமிழறிஞர்கள் கூறுகிருர்கள். செட்டிநாட்டில், இன்றும் திராவிடக் கலாச்சாரத்தின் அச்சு, சிறிதுகூடக் குன்றியதாகவோ, அறிந்ததாகவோ யாரும் சொல்லமுடியாது. கட்டுச்செட்டான நடைமுறைக் காரியங்களும் வருமுன் காத்துக்கொள்ளும் வாழ்க்கை முறைகளும் தென்மாவட்டங்களில்–குறிப்பாகச் செட்டிநாட்டில் தான் பின்பற்றப்படுகின்றன.

மன்னர் காலத்து மாளிகைகளைப்போல உயர்ந்த 'கெட்டிமச்சு' வீடுகள் தான் செட்டிநாட்டில் அதிகம். இன்றைக்குச் சென்னையில் மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வருவாய் தரக்கூடிய அரண்மனை போன்ற வீடுகள், செட்டிநாட்டில் குடியிருக்க ஆளில்லாமல் பூட்டிக்கிடக்கின்றன. எத்தனையோ மாடிவீடுகள் 'பேய்பிடித்த' வீடுகளாகக் கருதப்பட்டு விளக்கேற்றி வைக்க ஆளில்லாமல் வெள்ளெருக்கு முளைத்துக்கிடக்கின்றன. அந்த நாட்களில் தமிழகம் அப்படி வாழ்ந்திருக்கிறது! வீடுகள் மட்டும்தான் அப்படியா? தெருவுக்குத் தெரு கோயில்கள்! குளங்கள்!! ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு கிராமத்தளவு சுற்றுச்சுவர்! அதற்கென மிராசு! மானியம்! அந்தத் தர்மச்சொத்தைச் சுற்றி நூறு பேர், நூற்றைம்பது பேர்! இப்படித் தனித்தனி தர்பார்! அன்று நேற்று மட்டுமல்ல! இன்றும் அப்படியே!

இவ்வாறு தங்களுக்கென தனியான வழிமுறைகளை வகுத்துக்கொண்டு சுழல் தத்துவத்தில் காலத்தை நடத்தும் செட்டிநாட்டில், சைவத்தின்பால் பற்று வளர்ந்த அளவுக்கு, நாடு, விடுதலை-உரிமை என்பனவற்றில் ஆர்வம் இல்லாதது வருந்தத்தக்கதுதான்.

காங்கிரஸ் கட்சி வலுப்பெற்றிருந்த காலத்திலேகூட செட்டிநாட்டில் பரவலாக நாட்டுப்பற்று எழவில்லை. அங்கொருவரும், இங்கொருவருமாகத்தான் தலையெடுக்க முடிந்தது. கார்ணம், ஒவ்வொரு மனிதனையும் மாற்றியேயாகவேண்டும் என்ற பிரத்தியேக முயற்சி என்றுமே காங்கிரசுக்கு இருந்ததில்லை. தி. மு. கழகம் மலர்ந்த பின்புதான் செட்டிநாட்டில் தமிழரின் தனிக் கலாச்சார எழுச்சி வளம்பெற்று நாட்டுப்பிரிவினை உணர்ச்சி பலம் பெற்று வருகிறது. கும்பாபிஷேகங்கள் குறைந்துவருகின்றன. வைதீகத்தில் ஊறித் திளைத்திருப்போர்கூட 'பழைய கோயிலைப் பாதுகாத்தால் போதும்" என்ற காலக்கட்டத்திற்கு வந்துவிட்டார்கள். ஆடை, ஆபரணங்களிலேயே முழுக்கவனம் செலுத்திவந்த செட்டிநாட்டு வாலிபர்கள் நாட்டைப் பரிபாலிக்கும் நல்ல அரசை–தனியரசை உருவாக்கும் பெருமுயற்சியில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்கள். இதுவரை எத்தனையோ கட்சிகள் செட்டிநாட்டில் வாழ்ந்து கெட்டுப்போயிருக்கின்றன. எந்தக் கட்சியும் அமைப்பு முறைப்படி அங்கே காலூன்றவில்லை. கிளை அமைப்புகளும் பக்கத்து வட்டங்களில் பரவியிருந்தது கிடையாது. ஆனல் இன்றைய நிலையே வேறு. செட்டிநாட்டில் மட்டும் ஏறத்தாழ முப்பது கிளைகள் தி. மு. க. விற்கு இருக்கின்றன. ஒவ்வொன்றும் முறைப்படி இயங்கி வருகிற ஜனநாயக அமைப்புகள். திங்கள் தோறும் பிரச்சாரப் பொதுக்கூட்டங்கள் – நாடகங்கள்! கடந்த பத்தாண்டு காலத்துப்பணி, இன்றைய தினம் தேவகோட்டையில் தி. மு. கழகத்தின் சார்பில் மாநாடு நடத்தும் அளவுக்கு பயனைத் தந்திருக்கிறது. பிப்ரவரி 22, 23 ஆகிய தேதிகளில் இராமனுதபுர மாவட்ட மூன்ருவது மாநாடு–தேவகோட்டையில்! தமிழகத்தில் மறுமலர்ச்சி காண விரும்பும் அனைவருமே மகிழக்கூடிய சேதி இது. மாநாடு என்ருல்–அதுவும் காலைமுதல் மாலைவரை இறைவனடி தவிர வேறெதையும் நினைக்கமுடியாத சிவநேசர்களின் கோட்டத்தில் தி. மு. க. மாநாடு என்ருல் எளிதான காரியமல்லவே!

காங்கிரஸ் வரலாற்றில் தேவகோட்டை தனிப்பெருமை பெற்ற நகரம். 1942 ல் நீதிமன்றங்கள் கொளுத்தப்பட்டதும், தந்திக் கம்பங்கள் அறுக்கப்பட்டதும் அந்தப் புரட்சிப் பட்டணத்தில்தான்! தேவகோட்டையைத் தேசியக் கோட்டை என்பார்கள். அது ஒரு காலம். அந்தத் தேசியக் கோட்டையில் தான் இன்று உண்மையான நமது சொந்தத் தேசியம் பற்றிப் பேசப்போகிருேம். தேவகோட்டை பொதுவான தேசியத்திற்கு உழைத்தது! வெள்ளையரை விரட்டியது! வெள்ளையரை விரட்டிய பெருமையில், புரவியில் இருந்து இன்று புவியாளும் டில்லி வட்டாரத்தைக் காட்டிலும் தேவகோட்டை உழைத்தது அளவில் குறைந்தது என்று சொல்லமுடியுமா? அந்த நேரத்திற்கு எது சரி என்று கட்சி கருதிற்ருே அதைத் தேவகோட்டை நிறைவேற்றிக் காட்டியது. இடிந்த நீதிமன்றம் இன்னும் எழுப்பப்படவில்லை! சாய்ந்த தந்திக்கம்பங்கள் இன்னும் நிமிரவில்லை! ஆனல் தேவகோட்டை உயரவில்லை! இடிந்துகிடக்கும் தன்னுடைய நீதிமன்றத்தைப்போலத்தான், அறுந்துகிடக்கும் தன்னுடைய தந்திக்கம்பங்களைப் போலத்தான் தேவகோட்டை நைந்துகிடக்கிறது. இதற்கெல்லாம் ஒரு முடிவு வேண்டாமா? தேவகோட்டை தியாக முத்திரை பெற்றதற்கு வாழ்வு எங்கே? வெள்ளையரை விரட்டியதற்கு கேடயம் எங்கே? கேட்க நாதியில்லை! உழைத்து உழைத்து சலித்துப்போன சமுதாயம் இப்போதுதான் தனது தேசியத்தைச் சீர்படுத்தத் தொடங்கியிருக்கிறது. தேவகோட்டையில் பாடிவீடு அமைகிறது. அன்புள்ள நண்பர் இராம. வெள்ளையன் அழைக்கிருர். செட்டிநாட்டில் அறிவியக்கம் வேரூன்ற வேண்டுமென்ற தனியாத ஆர்வம் கொண்ட வாலிபர்களில் முதலிடம் பெறக்கூடியவர் நண்பர் வெள்ளையன். அவர் மாநாட்டுச் செயலாளர்களில் ஒருவர். தேவகோட்டை மாநாட்டின் வெற்றி அந்த வட்டாரத்தில் தி. மு. கழகத்திற்கு அழியாத கீர்த்தியைத் தேடித்தரும் என்பதில் ஐயமில்லை. அந்த வட்டார மக்கள் சட்டசபையில் தங்களுக்குப் பிரதிநிதி இல்லாமல் தவிக்கின்ற நேரத்தில் நாம் கூடுகின்ருேம். மார்ச்சு மாதத்தில் நடைபெற இருக்கும் துணைத்தேர்தலில் நாம் காட்டும் பிரதிநிதியை நாடு தேர்ந்தெடுக்கத் தயாராக இருக்கின்றது.

பேராசிரியர் அன்பழகன் அவர்களை மாநாட்டுத் தலைவராகவும், இலட்சிய நடிகர் ராஜேந்திரன் அவர்களைத் திறப்பாளராகவும் கொண்டு சிறப்பாக நடக்க இருக்கும் மாநாட்டை மேலும் மேலும் சிறப்பிக்க திராவிடப் பெருங்குடிமக்களை வரவேற்புக்குழுவினரின் சார்பில் தேவகோட்டைக்கு வருக வருக என அழைக்கின்ருேம்!

விற்பனையாகிறது !

அறிஞர் அண்ணுவின் எழில் ஓவியம்

ஏராளமான தோழர்களின் வேண்டுகோளுக்கிணங்க தென்றல் "பொங்கல் மலரில்" வெளியான அறிஞர் அண்ணுவின் மூவண்ணப்படம் பெரிய அளவில், கண்ணுடி போடுவதற்கு ஏற்ற முறையில் வழுவழுப்பான கனத்த ஆர்ட் காகிதத்தில் தயாரித்திருக்கிருேம்.

விலை 31 காசுகள்.

தபாலில் அனுப்ப தபால் செலவு உள்பட 50 காசுகள். வியாபாரிகள் கழிவு 6 காசுகள் நீக்கி தேவையான பிரதிகளுக்கு 25 காசுகள் வீதம் முன்பணத்துடன் விண்ணப்பிக்கவும்.

தென்றல் : : சென்னை-6.

இதுவும் ஒரு வாழ்வா?

கி. அல்லி

கமலி: மாலை மயங்குகிறது; மஞ்சள் வெயிலும் மறைந்து விட்டது. இருள் மெல்ல மெல்ல வந்து கொண்டிருக்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் எங்கும் இருள் சூழ்ந்து விடும். என் வாழ்வும் இருள் சூழ்ந்ததுதான். இந்த இருள் நாளைக் காலையில் விலகி விடும். எனது வாழ்வின் இருள்...?

பாலைவனமாகி விட்டது என் வாழ்க்கை. ஒரே வறட்சி; துன்பம், துன்பம், துன்பம்! இதைத் தவிர வேறென்றையும் காணேன். என் வாழ்நாள் நீண்டுகொண்டே போகிறது. நீண்ட சாலைக்கும் ஒரு முடிவுண்டு; நீண்ட நேர இரவுக்கும் ஒரு விடிவுண்டு; பெரிய தொடர் கதைகளும் இறுதியில் முற்றுப் பெறும். ஆனால் என் வாழ்க்கை எல்லையில்லாத இருட்பாதை; விடிவில்லாத இரவு; முடிவில்லாத தொடர்கதை. சுவையற்ற, சப்பிட்டுப் போன இந்தத் தொடர்கதை என்று முடிவுறுமென ஏங்குகிறேன்.

இந்த வேதனை தரும் வேளையில் எங்கிருந்தோ ஒரு சோகக் குரல் இனிய இசையைப் பொழிவது கேட்கிறது. ஆ! அந்த வீணையின் ஒலியைக் கேட்கும் பொழுது எனக்கு அவருடைய நினைவு வருகிறது. அதோ, அந்த அறையின் மூலையில் உள்ள வீணை—அவரது அன்பிற்குரிய வீணை—என்னிடம் பழங்கதைகளைக் கூறிக் கூறிக் குமுறுகின்றது. 'அந்த நாளில் என்னைப் பேணுவதில் இருவரும் எத்துணை ஆர்வம் காட்டினீர்கள்! மாலை வேளைகளில் ஒருவர் மாற்றி ஒருவர் என்னை மடியில் வைத்து இன்புற்றீர்களே! இன்றோ என்னை ஏறெடுத்தும் பார்ப்பவரில்லை!' எனப் புலம்புகின்றது. அவரது அந்த மதிமுகம் கண்ணெதிரே தோன்றி, 'கண்ணே! கமலி! என்னை மறந்து விட்டாயா?' என வினவுகிறது.

ஆ! யாரோ விம்முகிற ஒலி கேட்கிறது. இவ்வுலகில் என்னைத் தவிர துன்புற்றவர்கள் வேறு யாரும் இருக்கிறார்களா?...கலாவின் அறையிலிருந்தல்லவா அந்த ஒலி எழுகிறது? இந்த நேரத்தில் அவள் எதற்காக அழுது கொண்டிருக்கிறாள்? புது மண மங்கையர் மகிழ்ச்சிக் கடலில் திளைத்துக் கொண்டிருக்கும் நேரமல்லவா இது? இன்னும் சிறிது நேரத்தில் அண்ணா வந்து விடுவார். அவர் வரும் வேளையில் இவள் இப்படி....கூடாது; போய் ஆறுதல் கூறித் தேற்றியாக வேண்டும்.

கலா: வேதனை தாங்காது விம்மி விம்மி அழுது கொண்டிருந்தேன். தோளின்மீது ஏதோ கை படுவது போன்ற உணர்வு ஏற்படவே நிமிர்ந்து நோக்கினேன். இதென்ன! அக்கா நின்று கொண்டிருந்தார்! நான் இந்த வீட்டிற்கு வந்தது முதல் இதுவரை—இந்த ஆறு மாதங்களில்—ஒரு நாள் கூட அக்கா என் அறைக்கு வந்ததில்லை.

இந்த அக்கா ஒரு விந்தையான பெண்மணி. வீட்டில் யாருடனும் பேசுவது கிடையாது. வெளி வேலைகள் நிரம்பச் செய்வார். ஆனால் சமையல் அறையில் நுழைவதேயில்லை. என் திருமணப் பேச்சு நடந்தபோது என் கணவருக்கு ஒரு தங்கையிருப்பதாகப் பேச்சே எழவில்லை. கணவருடன் மாமியார் இல்லத்தில் நுழைந்தபோது தன் அறையிலிருந்து எட்டிப் பார்த்த அக்காவைக் கண்டு திகைத்தேன். அவரது அமைதி நிறைந்த முகம் என்னைக் கவர்ந்தது. பின்னர் அவரைப்பற்றிக் கணவரிடம் கேட்டபோது, "அவள் என் தங்கை; விதவை. நடத்தை சரியில்லை. நீ, அவளுடன் பேசக்கூடாது' என்றார். அவர் தம் தங்கையை இவ்விதம் விட்டுக் கொடுத்துப் பேசியது எனக்கு வியப்பைத் தந்தது. மேலும் களங்கமற்ற முகத்தினரான அக்கா நடத்தை கெட்டவர் என நம்பிவிட என்னால் இயலவில்லை. பிற்பாடு தினந்தோறும் மாலையில் அவர் எங்கோ சென்று வருவதிலிருந்தும் வீட்டில் யாருடனும் ஒட்டாமல் பழகுவதிலிருந்தும் என் கணவர் கூறியதில் நம்பிக்கை ஏற்படத் துவங்கியது. அதன் பின் நான் தனியாக இருக்கும் போது அக்கா என் பக்கமாக வந்தால் நான் சரேலென்று அகன்றுவிடத் தொடங்கினேன். இன்று இவ்விதம் அறைக்குள் வந்துவிட்டதைக் கண்டு அளவிலா வியப்போடு அவரைப் பார்த்தேன்.

"ஏன் கமலா அழுகிறாய்?" என்று பரிவுடன் கேட்டார் அக்கா. அழும் குழந்தையைத் தேற்றினால் அது பின்னும் அதிகமாக அழத் தொடங்கும். அதுபோல அக்கா இவ்விதம் அன்போடு கேட்டதும் என் துயரம் இன்னும் பெருகியது. 'அம்மா...' என்ற நான் அழுகையை அடக்க மாட்டாது திரும்பவும் விம்மத் தொடங்கினேன்.

"அம்மா என்ன சொன்னார்கள்? அழாமல் சொல் கலா."

மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டு இன்று காலை நான் செய்த சிறு பிழைக்காக மாமியார் என் பிறந்தகத்தாரைக் குறித்து ஒரு மணி நேரம் வசைபுராணம் பாடியதைக் கூறினேன்.

"அம்மா அப்படித்தான் ஏதாவது சொல்வார்கள். இதற்கெல்லாம் வருத்தப்படுவார்களா? அண்ணா வருகிற நேரம். முகத்தைத் துடைத்துக் கொள். உம்; சொல்வதைக் கேள்" என்று அன்புடன் கூறினார்.

கண்களைத் துடைத்துக் கொண்டு அவரை ஏறிட்டு நோக்கினேன். அமைதி தவழும் முகத்தையுடைய இவரையா எல்லாரும் தூற்றுகிறார்கள்? அன்பின் உருவமான அவரைப் பற்றிய செய்திகளை அறிய ஆவல் கொண்டேன். ஆனால் எப்படிக் கேட்பது?

கமலி: 'எப்படிக் கேட்பது?' என்ற தயக்கம் அவள் முகத்தில் தோன்றியதைக் கண்டு அவளது உள்ளப் பாங்கினை உணர்ந்து கொண்டேன், எனது கடந்த கால நிகழ்ச்சிகளை அறியாதவர்கள் என்னுடன் பழகத் தொடங்கும் போது இப்படித்தான் திகைப்பது வழக்கம். ஆகவே கலா என் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்துகொள்ள விழைகிறாள் என்பதை எளிதில் அறிந்து கொண்டேன்.

எப்படித் தொடங்குவது என்று தெரியாமல் சற்று நேரம் பேசாமல் இருந்தேன். பிறகு, 'கலா! என்னைப் பற்றி அண்ணா என்ன சொல்லியிருக்கிறார்?' என்று கேட்டேன். அவள் தயங்கினாள். நான் மிகவும் வற்புறுத்தவே அவள் தயங்கித் தயங்கி ஒருவாறு கூறி முடித்தாள். அவள் கூறியதைக் கேட்டதும் என் நெஞ்சில் யாரோ ஓங்கி உதைத்தது போன்றிருந்தது.

'என்ன! அண்ணாவா அப்படிச் சொன்னார்?' என்ற நான் நீண்ட நேரம் பேசத் திறனின்றி நின்றேன். தொண்டையில் அடைபட்டிருந்த துயரம் அகன்றபின், "கலா! நீ எதை வேண்டுமானாலும் நம்பு. ஆனால் நான் தவறான நடத்தையுடையவள் என்று மட்டும் நினைக்காதே. அதை என்னால் தாள இயலாது. நான் 'ஊரோடு ஒத்து' வாழவில்லை. என்பதென்னவோ உண்மை. ஆனால் அதைத் தவறாகப் புரிந்து கொண்டு என் நடத்தையில் களங்கம் கற்பிப்பது அபாண்டம். கலா! என் நடத்தை தூயது என்பதை நிரூபிக்க வேண்டுமானால் என் கதை முழுவதையும் கூறியாக வேண்டும். என்வாழ்க்கை கண்ணீர்த் துளிகளால் வரையப்பட்ட ஓவியம் அதில் மகிழ்ச்சி எங்கு தேடினாலும் கிட்டாது. அது ஒரு இருட்குகை. அங்கு ஒளியைத் தேடினால் ஏமாற்றமே ஏற்படும். என் கதை கொந்தளிக்கும் கடல் போன்றது. அமைதி கிடைக்கும் எனக் கனவிலும் எண்ணமுடியாது. இப்படிப்பட்ட கதையை— துன்பமும், இருளும், சூறாவளியும் நிறைந்த கதையை—உனக்குக் கூறப் போகிறேன். அதைக் கேட்டபின் நீ என் நடத்தையைப்பற்றிய முடிவுக்கு வரலாம். அதற்கு முன் தயவு செய்து யாருடைய கூற்றையும் நம்பிவிடாதே' என்றேன். இதற்குள் மாடிப்படியில் 'சரக்' 'சரக்' என்ற செருப்பொலி கேட்டது. அந்த ஒலி, அண்ணா வந்துவிட்டார் என்பதை அறிவித்தது. எங்கள் பேச்சு தடைப்

பட்டது. 'கலா! நாளைக்குப் பகலில் வேலை முடிந்ததும் என் அறைக்கு வா' என்று கூறிச் சட்டென்று என் அறைக்குள் ஓடி மறைந்தேன். வெகு நேரம்வரை இதயம் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது.

கலா: செருப்பு ஒலியைக் கேட்டபோதே என் கணவர்தான் வருகிறார் என்பதை அறிந்துகொண்டு விட்டேன். இருப்பினும் அவர் அறையில் நுழைந்தபோது அவர் வந்ததை அறியாதவள்போல் வேறு பக்கம் பார்வையைப் பதித்திருந்தேன். ஆம்; வழக்கம்போல் அவரை உவகையோடு வரவேற்க என்னால் இயலவில்லை. கணவர்மீது கொண்டிருந்த அன்பில் இன்று ஒருமாற்றுகுறைந்து விட்டது. பணிவுக்கு உருவம்கொடுத்ததுபோன்றிருக்கும்; அக்காவின்மீது பழி சுமத்த இவருக்கு எவ்வளவு துணிவு இருந்திருக்க வேண்டும்! இதுபற்றி ஆத்திரம் கொண்ட நான் வேண்டுமென்றே அசையாது உறுதியாக அமர்ந்திருந்தேன்.

தலைப் பின்னலின் தொடக்கத்தில் ஏதோ அசைவு ஏற்பட்டது. கூடவே 'குப்'பென்ற மணமும் பொங்கி வந்தது. அவர் என் பின்னலில் மல்லிகைச் சரத்தைச் செருகினார். அது நிற்காமல் நழுவிக் கீழே விழுந்தது. 'களுக்'கென்று சிரித்துவிட்டேன். அதன்பின் என் உறுதி நிலைக்கவில்லை.

மறுநாள் பிற்பகலில் வேலைகள்ஒருவாறு முடிந்தன. மாமனார் கூடத்து ஊஞ்சலில் படுத்துக் குறட்டை இசையைத் துவக்கினார். மாமியார் 'காமிரா அறை'யில் படுத்தவாறு மாமனார் இசைக்குப் பின்னணி பாடலானார். இந்த வேலை பார்த்து நான் மாடிக்கு நழுவினேன். கமலி அக்காவின் அறையில் நான் நுழைந்தபோது அவர் கையில் ஒரு புகைப்படத்தை வைத்தபடிக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார். என் உள்ளம் உருகிவிட்டது. என்னைக் கண்டதும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, 'வா கலா' என்றார். சில நிமிட அமைதிக்குப்பின் அவரே தொடங்கினார்; புகைப் படத்திலிருந்த இளைஞனைச் சுட்டிக் காட்டி "இவர்தான் என் கணவர்" என்றார். நான் பேசாமல் இருக்கவே மேலும் தொடர்ந்தார்; "கலா! இவர் வேற்று சாதிக்காரர் என்பதை அறிந்தால் நீ மிகவும் வியப்படைவாய். நான் பள்ளியில் ஆறாவது படிவத்தில் படித்துக்கொண்டிருந்தபோது இவர் எங்கள் கணக்கு ஆசிரியராக இருந்தார். கதிர்வேலன் என்பது இவரது பெயர். அவர் என் இதயத்துள் அன்பு விதையை ஊன்றிவிட்டார். அது முளைவிட்டுச் செடியாகிப் பின் மரமாகிப் பூத்துக் காய்த்துக் கனிந்த போதுதான் நான் நிலைமையை உணர்ந்தேன்; திடுக்கிட்டேன். 'காதலை வளர்த்துவிட்டோமே! வேறு வேறு சாதியாருள் எவ்வாறு திருமணம் நடைபெறும்? பெற்றோர் ஒப்புதல் தரமாட்டார்களே!' என அஞ்சினேன். இவர்தான் என் உள்ளத்தில் உறுதியை ஊட்டினார். "இப்படியே அஞ்சி அஞ்சி ஒவ்வொருவரும் தங்கள் காதலைப் பொசுக்கிக் கொண்டால் நம் சமூகம் என்று திருந்தும்? அஞ்சாதே கமலி! நாம் இந்தச் சமூகக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்து வெற்றி காண்போம்" என ஊக்கினார். பெற்றோர்க்கு எங்கள் செய்தி எட்டியபோது புலிபோல் பாய்ந்தார்கள். எனக்கும் துணிவு ஏற்பட்டுவிட்டது. "அடிமையாகக் கட்டுப்பட்டுக்கிடந்த காலம் 'மலையேறி'விட்டது. பெற்றோருக்குக் கட்டுப்பட்டு இத்தனை காலம்தான் இருக்கவேண்டும் என்ற வரையறை உண்டு. பதினெட்டு வயது நிறையப் பெற்றவளான எனக்கு என் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ளும் வகை தெரியும். என்னைத் தடுக்க வேண்டாம். தடுத்தாலும் தகர்த்தெறியும் திறன் எனக்குண்டு" என்றேன். இதைக் கேட்டதும் அண்ணா சீறினார். 'தடையை மீறிக்கொண்டு வெளியேறுவதாயிருந்தால் திரும்ப இந்த வாசற்படியில் ஏற நினைக்க வேண்டாம். எங்கள் முகத்தில் விழிக்கவும் எண்ண வேண்டாம்' என உறுமினார்......"

அக்கா மேலே பேச முடியாமல்

— 11ம் பக்கம் —

அத்திப் பழம்

மா. கி. தசரதன், எம்.ஏ

- 12 -

"என்ன ஞானசம்பந்தன் வருகின்றாயா இல்லையா சொல். நான் போகின்றேன்" என்று ஏகாம்பரம் பலமுறை கேட்டுப் பார்த்தான். ஆனால் ஞானசம்பந்தனோ ஏதும் சொல்லாமல் தலையைத் தாழ்த்தியவாறுமோனமாகிவிட்டிருந்தான்.

"சரி, சரி நீ எக்கேடாவது கெட்டுப்போ. உனக்கு இப்படித்தான் இரண்டு நாளைக்கு ஒரு குணம் வரும், போகும். மறுபடியும் தானாக வருகின்றாய் பார்" என்று சொல்லிவிட்டு இனி இவனை நம்புவதில் பயனில்லை என்று ஏகாம்பரம் போய்விட்டான்.

இவன் போன பின்னர் ஞானசம்பந்தன் அவன் சொல்லிய சொற்களை ஒருமுறை எண்ணிப் பார்த்தபோது அவனுக்கே வியப்பாக இருந்தது. 'இரண்டு நாளைக்கு ஒரு குணம் வரும், போகும்' 'என்று சொன்னது எவ்வளவு உண்மை என்பதை உணர்ந்தபோது ஏகாம்பரத்தின் திறமையைமெச்சினான். இரண்டு நாட்கள் என்ன, இரண்டு மணி நேரம் ஒரே எண்ணத்தில் ஆழ்ந்து இருக்கமுடியும் என்று ஞானசம்பந்தனால் சொல்லமுடியாதே. 'மூச்சுக்கு முப்பத்தெட்டுகுணம்' என்று பழமொழி சொல்வது ஞானசம்பந்தனைப் பொருத்த வரை மிகையில்லாமல் இருந்தது எனலாம்.

நிலைத்த எண்ணம் - முடிவு- நல்லதோ கெட்டதோ இதுவரை அவனிடம் இருந்ததே இல்லை. இருண்ட வானத்தில் தோன்றும் மின்னல் நிலைத்து நிற்பதில்லை. நெடுக ஓடி நொடிக்குள் மறைகின்றது. அதைப் போலத்தான் ஞானசம்பந்தனின் உள்ளத்தில் நல்லவனாக நடக்கவேண்டும் என்று ஒரு மின்னல் தோன்றும். ஆனால் அந்த மின்னல், மின்னி மறைந்து மறுநொடியிலேயே வேறு எண்ணம் வந்துவிடும். அவன் வாழ்க்கை இதுவரை இப்படித்தான் இதுதான் அதுதான் என்று தீர்மானமாகஇல்லாமல் இதுவா அதுவா என்று தடுமாறும் முறையிலேயே இருந்தது.

ஒய்யார விலாசுக்குப் போக வேண்டும் என்று எண்ணம் தோன்றியதும் அப்படித்தான். விடுமுறைக்கு வீட்டுக்குப் போகாமல் இங்கே அலைந்து திரியவேண்டும் என மனம் ஆசைப்பட்டதற்கும் ஒய்யார விலாஸ்தான் காரணம். ஆனால் அந்த ஒய்யார விலாசில் ஒருநாள் நடந்த நிகழ்ச்சியை எண்ணித் தான் ஞானசம்பந்தன் மூலையில் முடங்கிக்கிடந்தான்.

'வருகின்றாயா இல்லையா' என்று ஏகாம்பரம் கேட்டபோது ஏதும் சொல்லாமல் கிடக்கின்ற அளவுக்கு ஞானசம்பந்தனின் மனம் மருண்டு கிடந்தது.

முன்னாள் மாலை ஒய்யார விலாசுக்குப் போகும்போது மிக்க உற்சாகத்துடன்தான் போனான் ஞானசம்பந்தன்.

அன்றும் வழக்கம்போல் 'மூலை ஆள்' வந்து வரவேற்புரை சொல்லிப் பணிவோடு அழைத்துப்போனான். போகின்றபோதே 'இன்றுதான் ஐயா, வந்திருக்கிறது. புதிய உரு' என்று ஏதோ சொல்லிக்கொண்டே நடந்தான். அவன் சொன்னது ஒன்றையும் ஞானசம்பந்தன் காதிலே ஏற்றுக் கொள்ளவில்லை. 'சரி சரி' என்று ஏதோ சொல்லியவாறு முன்னேறினான்.

பழக்கடைக்காரன் சொல்வது எல்லாம் உண்மை என்று நம்புவதானால் கடையையே வாங்க வேண்டும், இயற்கையில் புளிப்புப் பழங்களோ - அழுகிவிடும் பழங்களோ - இல்லை, என்று தீர்மானிக்க வேண்டும். ஆனால் யாரும் கடைக்காரன் சொல்வது முற்றிலும் உண்மை, உண்மையன்றி வேறில்லை, என்று எண்ணிடுவது இல்லை. 'புளிக்காது ஐயா-புதிய பழம்' என்று கடைக்காரன் எவ்வளவு அழுத்தந் திருத்தமாகச் சொல்லுகின்றானோ அவ்வளவுக்கு அது நேர் மாறானது என்பதை அநுபவம் உணர்த்துகின்றது.

ஞானசம்பந்தனும் ஒய்யார விலாஸ் பற்றிய வரையில் அநுபவம் மிக்கவன் ஆகிவிட்டான். ஆகவேதான் அவன் அந்த மூலை ஆள் சொன்னது எதையும் நம்பாமல் காதிலே ஏற்றுக்கொள்ளாமல் சரிசரி என்று சொல்லிக் கொண்டே நடந்தான்.

வழக்கம்போல் ஞானசம்பந்தன் போய் ஒரு சோபாவில் உட்கார்ந்ததும் இரண்டு மூன்று பெண்கள் வந்தனர். அவர்கள் முகம் அவனுக்குப் பழக்கமானதாக இருந்தது. ஆனால் அவர்களுக்கு அவனை நினைவு இருந்ததோ என்னவோ என்றாலும் ஒரு புன்சிரிப்பை வீசிவிட்டு ஒயிலாக நடந்து கழுத்தை ஒரு வெட்டு வெட்டிவிட்டு வேறு வாயில் வழியே வேகமாகக் கையை வீசிக்கொண்டு நடந்தனர்.

"என்ன இவ்வளவுதானா?" என்று கேட்டான் ஞானசம்பந்தன் அந்த மூலை ஆளைப் பார்த்து. காதோரத்தில் சொரிந்தபடியே அந்த ஆள் ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

"என்னய்யா சிரிக்கிறாய்? சொல்லேன்"

"இல்லை கொஞ்சம் பொறுத்தால்..."

"ஏன் பொறுக்க வேண்டும்?"

"அந்தப் புதுசு சொன்னேனே, அது தூங்குது கொஞ்சம் பொறுத்தால்..."

"எவ்வளவு நேரமாகும்?"

"இதோ-பாக்கு கடிக்கிற நேரம்"

"சரி இருக்கிறேன். ஒருகாப்பி கொண்டு வா" என்று சொல்லிவிட்டு கால் சட்டைப் பையிலிருந்த சிகரெட் கூட்டை எடுத்து ஒரு சிகரட்டைப் பற்ற வைத்து சுருள் சுருளாகப் புகையைக் கக்கியவாறே காலை நீட்டி உட்கார்ந்துகொண்டு அண்ணாந்து கிடந்தான்.

"தூங்குதாம்-" துணிந்து பொய் சொல்லுகின்றானே இந்த ஆள். வேறு என்னதான் செய்யமாட்டான். இந்த நேரத்தில் தூங்கிவிட்டால் பிறகு 'பிழைப்பு' எப்படி நடக்கும். இருக்கட்டும் பிறகுதான் போகலாம் என்று எண்ணிக் கிடந்தான். அந்தமூலை மனிதன் காப்பியைக் கொண்டு வந்து வைத்தான். அதை எடுத்துத் துளி துளியாகப் பருகியவாறே உதடுகளை ஈரமாக்கிக் கொண்டான் ஞானசம்பந்தன்.

"போய்யா-போய், வரலாமா பார்த்துவிட்டு வா" என்று அவனை வெருட்டினான்.

"இதோ வந்தேன்" என்று அந்த ஆள் பறந்தான். சற்றைக்கெல்லாம் திரும்பி வந்தவன் ஞானசம்பந்தனை ஒரு அறைக்குள்ளே கொண்டு போய் உட்கார வைத்தான்.

இதற்கு முன்னேயும் ஞானசம்பந்தன் அந்த அறைக்கு வந்திருக்கின்றான். ஆனாலும் அப்போது இல்லாத அலங்காரம், இப்போது இருந்தது. ஆடம்பரமாக இருந்தது.

அறையின் ஒரு மூலையில் இட்டிருந்த கட்டிலின் விளிம்பில் ஒரு ஓரத்தில் தலையைத் தாழ்த்தியவாறு ஏதும் அறியாத பசு போல் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அதைக் கண்டு ஞானசம்பந்தன் ஒன்றும் வியப்படையவில்லை. ஆனால் கட்டிலின் இன்னொரு மூலையில் தடியன்போல ஒருவன் அந்தப் பெண்ணையே விறைத்துப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்ததுதான் ஏன் என்று விளங்காமல் வியப்பை விளைத்தது. குறிப்பறிந்தவனைப்போல அந்த மூலை, "அவர் இதுவுக்கு உறவுங்க, போய் விடுவார்" என்று சொன்னான்.

"சரி என்ன திருமண மேடையா கீழே பார்ப்பதற்கு?" —என்று கேலியாகக் கேட்டான் ஞானசம்பந்தன்.

"தடிக்கழுதை, ஐயா கேட்கிறாரே காதில் விழவில்லை. தலையைத் தூக்கித்தான் பாரேன்" கட்டிலின் வேறு மருங்கில் இருந்த அவள் உறவினன் ஊளையிட்டான்.

சூரியகாந்தி மலர் தலையைத் தூக்குவதுபோல அந்தப் பெண் மெல்ல தலையை நிமிர்த்தினாள்.

வட்டமான முகம். வடிவழகும் இருந்தது. ஆனால் அந்த முகத்தில் சோகம் கப்பிக்கொண்டிருந்தது. விக்கி அழும் தோற்றம் தெரிந்தது. உற்றுப் பார்த்தபோது விழிகளினின்றும் நீர் முத்து முத்தாக வடிவது தெரிந்தது.

ஞானசம்பந்தனால் இந்தக் காட்சியைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அவன் இதுவரை கண்டதெல்லாம், "அஞ்சுகம், வா; அன்னம், வா - மாணிக்கம், வா" என்று அழைத்தவுடன் ஆடிக்கொண்டு வந்து பாடிக் கொண்டு போகும் பாவையாரைத்தான். அவர்களுடைய

கண்களை மூடிய இமைக்கதவுகள் மூடிமூடித் திறந்து மோடி வித்தை செய்வதைக் கண்டிருக்கின்றான். கையும் காலும் ஆடலரங்கில் அபிநயம் பிடிப்பது போல் ஆடிடுவதனைக் கண்டிருக்கின்றான். ஆனால் விழிகளில் நீர்வடிக்கும் காட்சியை அவன் கண்டதில்லை. ஆகவே அவனுக்கு அது திகைப்பாக இருந்ததோடு, எப்படியாவது இதிலே என்ன இருக்கிறது, என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலும் பிறந்தது.

"என்னய்யா?" என்றான்.

"இருபத்துஐந்து கொடுங்கள். ஐயா எப்போதும் வர வேண்டும்-போகவேண்டும். சுமார் எதற்கு நிறையச் சொல்வது என்றான் அந்த மூலை.

"ஆகட்டும்" என்றான் ஞானசம்பந்தன். உடனே இருபத்தைந்து ரூபாய்களை எடுத்துக் கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண்டவுடன் கட்டிலின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்த ஆளும் மூலையும் வெளியே போய்விட்டனர்.

அவர்கள் போனபின் ஞானசம்பந்தன் எழுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு வந்தான்.

அந்தப் பெண்ணை நெருங்க நெருங்க அவன் உடலில் மெல்ல ஒரு நடுக்கம் உண்டாவதை உணர்ந்தான். கட்டுக்கடங்கிக் கிடந்திடும் கையும் காலும் கட்டு மீறி காற்றிடை சிக்கிய துரும்பு போல் வெல வெல நடுங்குவதாக உணர்ந்தான். உடலெங்கும் புதிய இரத்த ஊற்று பாய்ந்தோடுவது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. நாவறண்டது. எச்சிலை மென்று விழுங்கியவாறே அவள் அருகில் சென்று மெல்ல தோளின்மீது கையை வைத்துத் தொட்டான்.

அடங்கிக்கிடந்த விம்மல் ஒலி ஒலி வீறிட்டது.

ஞானசம்பந்தனுக்கு என்னவோ போல இருந்தது. தான் செய்யத் தகாத ஏதோ ஒரு செயலைச் செய்வதைப் போன்ற உணர்ச்சி ஆழமாக எழுந்தது. ஆனாலும் துணிவை வரவழைத்துக்கொண்டு.

"என்னைக் கண்டு அஞ்சுகின்றாயா?' என்றான்.

'இல்லை' என்று சொல்லிடுவதுபோல் அவள் தலையை இப்படியும் அப்படியும் ஆட்டினாள்.

"பின்னே, ஏன் அசடுபோல் அழுகின்றாய்? உன் பெயர் என்ன, சொல்லேன்" என்று கெஞ்சினான்.

ஒய்யார விலாஸ் மாடியில் எத்தனையோ பேருடைய பெயர்களைக் கேட்டிருக்கின்றான். அவன். அவை ஒன்றுகூட நினைவில் நின்றதில்லை. ஆனாலும் 'பெயர் என்ன' என்று கேட்பது தான் நல்ல அறிமுகமாக இருக்கிறது என்பதைக் கண்டுகொண்டதினால் 'பெயர் என்ன' என்று கேட்டு வைத்தான்.

அதற்கும் அவள் பேசாமல் கிடந்தாள்.

"பேசத் தெரியும் அல்லவா உனக்கு?"

'தெரியும்' என்று சொல்வது போல தலையை அசைத்தாள்.

"பின்னே, ஏன் வாயைத் திறக்கவில்லை? என்னைப் பிடிக்கவில்லையா?" என்று கேட்டான்.

அதற்கு அவள் பதில் சொல்லவில்லை. அவளுடைய குரலில் தேம்பும் ஒலி தெளிவாகஎழுந்து அடங்கியது.

ஞானசம்பந்தனுக்கு இது புதிய அநுபவமாக இருந்தது. வந்தேன், போனேன், என்று இது நாள்வரை அவன் கண்டான். ஆனால் இன்றோ அவன் வந்ததுமுதல் அழுது அல்லலுறும் ஒரு காட்சியைக் காணுகின்றான். எனவே எப்படியாவது அவள் அழுகின்ற காரணத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று முடிவு செய்துகொண்டான்.

ஒய்யார விலாசுக்கு வந்த பின்னும் கண்ணைக் கசக்கிக்கொண்டிருக்கிறாள் ஒருத்தி என்றால் அது விந்தைக்குள்ளும் விந்தையாக இருந்தது அவனுக்கு.

'பணம் பாதாளம்வரை பாயும்' என்ற பழமொழியைக் கற்றவன் ஆயிற்றே அவன், அதனால் அந்தப் பாதாள அம்பை இங்கே எய்து பார்க்கலாம் என்று எண்ணியவனாய் மறுபடியும் பையிலிருந்து ஒரு பத்து ரூபாய்த் தாளை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"இந்தா அது அவர்களுக்கு; இது உனக்கு வைத்துக்கொள்" என்றான்.

கையால் அதைத் தள்ளியவாறு "வேண்டாம் அதுவே போதும் எனக்கு ஏன்?" என்று மறுத்துவிட்டாள்.

ஞானசம்பந்தனுக்கு ஒன்றுமே புரியவில்லை. எல்லாமே வியப்பாக இருந்தது. வாழைப்பழம் வேண்டாம் என்று ஒரு குரங்கு சொல்லிவிட்டால் அது எவ்வளவு பெரிய புதிர் - அதைப் போலத்தான் ஒய்யார விலாஸ் மாடியில் ஒருத்தி பணம் கொடுத்தது போதும் வேறு வேண்டாம்" என்று தடுத்திடுவது இதுவரையில் ஞானசம்பந்தன் கண்டதெல்லாம், வெளியேறும் போது 'காப்பிக்கு ஏதாவது கொடுத்துவிட்டுப் போங்கள்' 'வெற்றிலைக்கு' சில்லறையாவது கேட்கின்றவர்களைத் தான். ஆனால் இன்றோ 'பத்து ரூபாய்த்தாள் வேண்டாம்' என்று ஒருத்தி வெறுத்துவிடுகின்றாள். இதைக் கண்டதும் ஞானசம்பந்தன் "ஏன் பேசவே மாட்டாயா? சொல்" என்று கெஞ்சினான்.

"நீங்கள் என்ன என்னிடம் பேசிக்கொண்டிருக்கவா வந்தீர்கள்?" என்று கேட்டுவிட்டு அவளால் வாளா இருக்க இயலவில்லை, வாய்விட்டு அழுதாள். விக்கி விக்கி அழுதாள். தேம்பித் தேம்பி அழுதாள், குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"இந்த உடலைத்தானே நாடினீர்கள்?" என்று எப்பாடுபட்டோ கேட்டுவிட்டு கட்டிலின் விளிம்பில் தலையை மோதிக் கொண்டாள்.

"ஏன் வந்தோம்" என்று ஆகிவிட்டது ஞானசம்பந்தனுக்கு.

எப்படியாவது அவள் அழுகையை நிறுத்தினால் போதும் என்ற முடிவுக்கு வந்தான். மெல்ல ஒரு மூலையில் போய் உட்கார்ந்துகொண்டு ஒரு சிகரட்டை எடுத்துப் புகைத்தான். அது புகைந்து புகைந்து சின்னதாகி கையைச் சுட்டபின் தூக்கி எறிந்தான். எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடந்தான்.

சற்றுநேரம் கழித்து மெல்ல மறுபடியும் அவளிடம் போய் நின்றான்.

இந்தமுறை அவள் ஒன்றும் பேசவும் இல்லை. கல்லைப்போல் உணர்ச்சியை வெளிக் காட்டாமல் நின்றாள். அவள் முகத்தில் கல்லின் சாயல் இருந்ததே தவிர கனிவு காணோம்.

தோளின்மேல் கையை வைத்தான் ஞானசம்பந்தன். கைக்குக் கீழே அந்த உடல் நில நடுக்கத்தில் தரையும் தண்ணீரும் ஆடுவதைப்போல ஆடுவதை உணர்ந்தான்.

"உன் பேர் என்ன என்று தானே கேட்டேன். சொல்லவில்லையே-என்மேல் கோபமா? ஊம் சொல்லு"

என்று கெஞ்சினான்.

'உங்களுக்கு ஏன் என் பெயரும் ஊரும்' என்று அவள் மெல்ல விட்டு விட்டுக் கேட்டாள்.

"சும்மாதான் கேட்டேன்"

"இதெல்லாம் எனக்குத் தெரியாது" என்று சொல்லிவிட்டு மறுபடியும் தேம்பத் தொடங்கிவிட்டாள்.

சாம்பல் பூத்த நெருப்பை ஊதிவிட்டதைப்போல ஆகிவிட்டதே என்று ஞானசம்பந்தன் தவித்தான். ஆனால் இந்தப் பெண்ணின் வாழ்க்கையில் ஏதோ ஒன்று இருக்கிறது. தெரிந்துகொண்டுதான் தீர வேண்டும் என்று முடிவு செய்துகொண்டான்.

இதற்குள் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. எழுந்து போய் "யாரது?" என்றான் ஞானசம்பந்தன்.

"நான்தான்" என்றான் மூலை.

"என்ன?"

"என்ன, இப்படிக் கேட்டால் உங்களுக்குத் தெரியாதா சார்— நேரம் ஆகிறதே அதற்குச் சொன்னேன்"

"சரி ஐயா நேரம்தான் ஆகின்றது. நான் இல்லை என்று சொல்கிறேன். என்று அவனுக்கு விடை சொன்னானே தவிர இந்த இரகசியத்தைத் தெரிந்துகொள்ளாமலா போய்விடுவது என்று தயங்கினான். ஏதோ முடிவுக்கு வந்தவனாய் இரவு முழுவதும் இருக்கிறேன். எவ்வளவு தர வேண்டும்?"

"சார், இதுவரையில் அப்படி இருந்ததில்லையே"

'இதுவரை இல்லை. இனி இருப்பேன். உனக்கென்ன எவ்வளவு சொல்."

"அவரைத்தான் கேட்கவேண்டும். இதோ கேட்டுச் சொல்லுகின்றேன்" என்று விரைந்தான்.

திரும்பி வந்து அவன் என்ன இலேசுப்பட்டவனாக இல்லை. முதலில் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்றான். பிறகு நூறு கேட்டான். எதற்கு சார் அவ்வளவு என்றான் அவன்.

"இருக்கட்டும் இந்தாவாங்கிக் கொள என்று சொல்லி அவனிடம் தாள்களை எண்ணினான்"

அந்த முரட்டு ஆள் வந்து நல்லபடி நடந்துகொள். காலையில் வருகின்றேன்" என்று உறுமி விட்டுப் போனான்.

ஞானசம்பந்தன், மூலையை அழைத்து "இரண்டு சாப்பாடு. பால், பழம் எல்லாம் உடனே கொண்டு வா. இந்தா பத்து ரூபாய்" என்று கட்டளை இட்டான்.

"சாருக்கு இன்று ஒரேகொண்டாட்டம்தான்" என்று முணுமுணுத்தவாறே அவன் கீழே போனான்.

கொத்துக் கொத்தாக காபூல் திராட்சைப் பழங்களும் ஆப்பிள், ஆரஞ்சு, மலைவாழையுமாக ஒரு கூடையையும் கூஜா நிறைய பாலும், ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு ஏலம் கிராம்பு இவையும், கொண்டு வந்து வைத்துவிட்டு "வேண்டுமானால் ஒரு குரல் கொடுங்கள் சார். ஓடி வருவேன்" என்று சொல்லிவிட்டு அவன் கதவை மூடிக்கொண்டு போனான்.

தொடரும்

வெண்பாப் போட்டி-11.

ஈற்றடி :

செத்துப்போ னானே சிவன்!

முடிவு தேதி 22-2-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

கேள்விப் பெட்டி

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

ஆ. இராமசாமி,
நாகப்பட்டினம்

(அ) "கோள் இல் பொறியின் குணம் இலவே என் குணத்தான் தாளை வணங்காத்தலை" எனும் குறட்பாவின் கருத்து யாது? "என்குணத்தான்" என்பது எதை-யாரைக் குறிக்கின்றது? என் குணங்கள் யாவை?

(ஆ) திருக்குறளில் பல இடங்களில் கையாளப்பட்டுள்ள "முகம்" தனித்தமிழ் சொல் தானே? சிலர் அது வடமொழிச் சொல் என்று வாதிக்கின்றனர். ஆதாரத்துடன் சொல்லாராய்ச்சி அடிப்படையில் விளக்கவும்.

(அ) 'கோள்' இல்லாத 'பொறி' 'குண'மற்றது. அதனையே, 'எண் குணத்தான் தாளை' வணங்காத தலை 'பயனற்றது.' இவ்வாறு உவமான உவமேயங்கள்போல, பின்னதற்குமுள்ளது ஆதாரமாக இரண்டு உண்மைகள் இக்குறட்பாவில் கூறப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியை மறவாமலேதான் நாம் வள்ளுவர் உளங்குறிக் கொண்ட பொருண்மையை இக்குறட்பாவில் ஆராய்தல் வேண்டும். ஏனெனில் 'கோள்' எதுவாயினும் அது இறைவன் தாளுக்கு இணையாகக் கூறப்பட்டது. 'பொறி' எதுவாயினும் அது 'வணங்காத்தலைக்கு' இணையானது. 'குணமற்றது' எதுவானாலும் அது 'பயனற்றது' என்பதனுடன் இசையுடையது. இந்த மூன்று இணை இணையான ஆறுசொற்கள் அல்லது தொடர்களைச் சுற்றியே வள்ளுவப் பொருண்மை வட்டமிடமுடியும்.

குறட்பாப் பரிமேலழகர் உரைப் பதிப்பில் முதலதிகாரத்தின் ஏழாவது ஆகவும் மணக்குடவர் உரைப் பதிப்பில் இறுதிக் குறட்பாவான 10-வது ஆகவும் விளங்குகிறது.

எண்குணத்தானின் சொற்பொருள் எதுவானாலும் சுட்டிய பொருள் இறைவணக்கம் அல்லது இறைவாழ்த்து ஆகிய முதலதிகாரப் பொருளாகிய இறைவனே என்பதில் ஐயமில்லை. 'கோள்' என்பதற்கு உரையாசிரியர்கள் பொறிகளினால் கொள்ளப்படும் புலனறிவாகிய பயன் என்று கூறியுள்ளார்கள். ஆனால் பயன் செயலின் பின்வரும் விளைவு. கோள் அப்பயனை எதிர் நோக்கும் செயலின் முன்னை நோக்கு. குறிக்கோள் என்ற சொல்லில் இன்றும் அதனை அப்பொருளில் குறி அல்லது இலக்குக் கருவி என்ற பொருளுடைய சொல்லுடன் இணைத்து வழங்குகிறோம். குறியும் கோளும் அதாவது இலக்கும் அதை நோக்கிய நோக்கும் இல்லாத விடத்து, செயலுக்கு விளைவு இருக்கும், பயன் இராது. ஏனெனில் பயன் என்பது குறி, கோள் வழிகள் நின்று எதிர்நோக்கிய விளைவின் நிறைவே.

பொறிகள் புற உலகுக்கும் அக உலகாகிய உள்ளத்துக்கும் இடையேயுள்ள வாயில்கள், கருவிகள். உள்ளம் குறி வழிநின்று கோள் நோக்கு இல்லாதபோது, கடை வாயிலாக மட்டுமே இயங்கும் கருவியாய், காரணத்தின் வழிப்பட்ட காரியமாகிய பயன், புல உணர்வு தரமாட்டா. கவனமில்லாதபோது கண் பார்க்கும், காணாது. செவியில் ஓசை, செவிப்படும், கேளாது. மூக்கில் மணம் உலவும், அது முகராது. நாவில் சுவை தட்டும், அது சுவை யுணராது. வாய் பிதற்றும் பேசாது. மெய் ஊறுணரும் உணர்ந்து செயலாற்றாது.

குறி, கோள் வழி நின்ற பொறி என்னும் கருவியே புலனுணர்வு என்னும் பயன் தருதல்போல, இறைவன் தாள் வணங்கிய, வழி நின்ற தலையன்றிப் பயன்படாது. இங்கே பொறியின் உயிர்க் குறிக்கோள் உள்ள மாதல்போல, விழிப்புடைய உள்ளமாகிய கவனமாதல் போல, வாழ்வின் கருவியாகிய உயிரும், அதன் உடலும் வாழ் முதல் வாழ்வின் கரு முதலாகிய கடவுளின் குறி வழி நின்று கோள் அதாவது கடவுள் குறிக்கோள் இல்லாத வாழ்வும் வாழ்வின் பயன் தராது என்று சுட்டப்படுகிறது.

ஏனைய சமயநாவலர், அறநூலார், பொருள் நூலார், இன்ப நூலார் போல, வள்ளுவர் கடவுள் வாழ்வு சார்ந்த, அறம் பொருள் இன்பச் சார்பற்ற, வீட்டுக்கேயுரிய அன்னியப் பொருளல்ல. அது வாழ்வின் வளர்ச்சிக்கேற்ப விளக்கமடையும். கடவுள் என்பது வாழ்க்கைக் குறிக்கோள் என்ற திராவிட இயக்கத்தாரின் விளக்கமே வள்ளுவ விளக்கமென்பதைக் 'கோள்' என்ற சொல் இங்கே சுட்டிக் காட்டுகிறது.

வணங்குதல், பூசித்தல், வழிபடல் என்ற தமிழ்ச் சொற்கள் தமிழ் வள்ளுவப் பண்பாடலாகிய சொற்கள். இவற்றைப் பிற மொழிகள் மொழி பெயர்த்தலும் அரிது. பிற மொழிச் சொற்களுக்கு ஈடாக அவற்றைக் கூறுதலும் பிளவுபட்டதேயாகும். திசை நோக்கல், திசையில் வளைதல், பண்பு போற்றுதல், செயலில் பின்பற்றுதல் என்ற பொருள் உடைய தெய்வ வணக்கச் சொற்கள் பெரு நம்மொழியிலும் இல்லை. கும்பிடுதல், கூப்புதல் வேண்டுதல், நேர்தல் என்ற சொற்கள்கூட தமிழ்ப் பண்பில் ஊறியவை. அவற்றின் பண்பு நீக்கியே மற்ற மொழிகளில் அவை (பிரார்த்தனை, பிரேயர் முதலிய சொற்கள்) மொழி பெயர்த்து உலக சமய ஏடுகளில் இடம் பெற்றன.

குணம் வட சொல்லென்று மயங்குபவர் உண்டு. ஆனால் வடமொழியில் சொல்லின் பழம் பொருள் தர்மம் என்று மொழி பெயர்க்கப் பட்டதன்பின், 'குணம்' என்ற சொல் நற்பண்பு என்ற பொருளில் (குறை-தோஷம் என்பதன் எதிர் சொல்லால்) வழங்கிற்று. குணம் என்பதன் தமிழ்ப் பொருள் இயல்பு என்பதே. நீடித்த பயிற்சியால் இயல்பின் அடிப்படையில் தோன்றும் புதுப் பயனே பண்பு. பழகுதல் என்ற சொல் தொடர்பும், பயில்தல் என்பதன் பொருள் தொடர்பும் பண் என்பதன் மரபுத் தொடர்பும் கொண்ட சொல் இது. குணம் இங்கே கருவிக்குரிய இயற்பண்பு, குறிக்கோள் வழி நின்று பயன் தரும் உயிர்ப் பண்பு குறித்தது. யாழ் செய்பவன் பண்ணறிவு குறித்து அதைச் செய்தாலன்றிப் பண்ணின் கருவியாகிய யாழ்பண் தராது. யாழ் செய்பவன் குறிக்கோள் இவ்வழி யாழின் 'குணம்' ஆகிறது.

'தலை...பயனில்' எனக் குறட்பாவில் ஒருமை எழுவாய் பன்மை வினையில் முடிகிறது. பரிமேலழகர் வினைக்கேற்பத் தலையைத் தலைகள் என்று கொண்டார். மணக்குடவர் 'தலை' என்பதைத் தலையையுடைய உடம்புகள்' என்று பொருள் பெயர்த்தார். மணக்குடவரின்குறிப்புரையே இங்கே குறி யணுகிய வுரை. தலை உடம்பின் ஆகு பெயராய், உடம்புமட்டுமன்றி உடம்பின் உயிர்ப் பகுதி குறித்து, வாழ்வின் ஆகு பெயராயிற்று. வாழ்வு உயிர்ச் செயலுரு. அது உடம்பின் வழி இயங்குவது.

தாள் காலடி மனித உயிருக்கு, தனி உயிருக்குச் சிறந்த உறுப்புத் தலை. ஆனால் மனிதன் நோக்கில் இறைவனுக்கு உரிய சிறந்த உறுப்பாகத்தானே வள்ளுவர் காலந் தொட்டு எல்லாச் சமயங்களிலும் குறிக்கப்பட்டது. தென்கலை (ஹினயான) புத்தர் காலத்திலும் முற்காலச் சைவ வைணவ, சமண நெறிகளிலும், பிற சமயக் கோட்பாடுகளிலும்கூட, கடவுளுக்கு உருவாகத் 'திருவடிகள்' மட்டுமே சமைக்கப்பட்டன. உருவற்ற ஒரு கடவுள் வழிபாடு திருவடி வழிபாடாகவே வள்ளுவர் காலத்தில் தொடங்கிற்று. பின்னாட்களில் 'திருவடி' ஒரு கடவுளாகி, கடவுள் கண்ட அடியார்களையும், கடவுள் ஊர் திகளாகிய மயிலும் விடையுமாகப் பெருகிற்று. அடியார்களைத் தமிழர்மட்டும் இன்னும் 'அடிகள்' என்றே அழைப்பர்.

மனிதனுக்கு மட்டும் ஏன் தலை சிறப்பு, கடவுளுக்கு மட்டும் ஏன் தாள் சிறப்பு?

மனிதன் சீரிய முயற்சி தலைப்படுதலே. அவன் அறிவு வழிநின்று, குறிக்கோள் வழிநின்று, மூளை வழி நின்று செயலாற்ற வேண்டும். கடவுளை வணங்கும் தலையாகத் தமிழர் வள்ளுவப் பண்பில் நின்று உருவாக்கியது. இதுவே. ஆனால் கடவுளே குறிக்கோள். அதனை மனிதன்கடைப்பிடித்தல்வேண்டும். அந்தக் 'கடை'யே திருவடி, 'தான்' செயல் முனைப்பு 'தாளாண்மை' எனப்படுவது இதனாலேயே தன்னலம், தன் முனைப்பற்ற உயிரின் பண்பார்ந்த செயலை இது குறிக்கிறது.

'தானாற்றித் தந்தபொருளெல்
லாம்தந்தார்க்கு
வேளாண்மை செய்தற்
பொருட்டு'

என்ற குறள் 'தான்' எது, அதன் வழிநின்று 'வெள்' ஆள்வது எவ்வாறு என்ற வள்ளுவ நெறிகளைக குறிக்கிறது.

குறிக்கோள் எல்லையின்றி மனித நாகரிக வளர்ச்சி தோறும் வளர்வது மனிதன் அதன் தலை, முளைத்த பகுதி காணமாட்டான். 'தாள்' அதாவது தன் கண்ணுக்குத் தெரியக்கூடும் பின்னுரு, நிழுருவே கண்டு, 'தலை' நோக்கி அதனைப் பற்றுவான். தமிழரின் வள்ளுவம் சார்ந்த 'தலை-தாள்' வேதாந்தம் இது இதனடிப்படையை மொழிகளிடையே தமிழ் மொழியில் சிறப்பாகவும் மற்ற மனித இனமொழிகளில் பொதுவாகவும், சமயல் களிடையே வள்ளுவத்தில் சிறப்பாகவும் மற்ற உலக சமயங்களில் பொதுவாகவும் காணலாம்.

இறைவன் பெயர்களாகக் குறள் தோறும் கூறப்பட்ட தொடர்களுள், இக்குறட்பாப் பொருள் முழுதும் இங்கே விளக்கி, அதன் பின்னணியிலுள்ள தமிழ் வள்ளுவப் பண்பாடுகளும் கண்டோம். இறைவன் இக்குறட்பாவில் எண் குணத்தாள் என்று குறிக்கப்படுவானேன்?

'எண் குணங்களாவன: தன் வயத்தனாதல்: தூயஉடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாகங்களில் குரல், பொருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்று குறித்து இக்குணங்களுடைய பண்புருவம் கடவுள் என்று தொனிக்க வைக்கிறார்.

'எண் குணத்தான்' என்ற தொடருக்கு 'எட்டுக் குணத்தினையுடையான்' என்று பொருளெழுதி, எட்டுக் குணங்களெவை என்று விளக்க முன்வராதுவாளா நின்றனர் மனக்குடவர்.

'எண்குணத்தான்' என்ற தொடரின் முதலிரண்டெழுத்துக்களை எண்ணுத்தொகை முதலாக்காமல், பண்புத்தொகை முதலாக்கி 'எளிமையான குணத்தையுடையவன்' என்று பொருள் கூறுகிறார் புலவர் குழந்தை. அடியார்க்கு ஒளியன் (பக்தவத்சலன்) என்ற சமயப் பொருளை இது நினைவூட்டுகிறது. சற்றுச் சமய வேறுபாடும் பேத உணர்வும் மிகுந்த காலத்தில் காலத்தில் இதுவே 'நம்பினபேருக்கு நடராசா, நம்பாத பேருக்கு எமராசா!' என்று நரிபுற்றது. வள்ளுவப்பண்பு இடைக்கால சமயங்களில் சொல்லும் பொருளும் மாறுபடாமலே பண்பில் இழிந்த வகைகளை இது குறித்துக் காட்டுகிறது.

'எண்குணத்தான' என்பதற்கு' வள்ளுவர் என்ன பொருள்கொண்டார் என்று காணுமுன், இன்றுள்ள சமயங்கள் வள்ளுவத்தின் வழி நின்று பண்பில் இழிந்தமையாதல் போல, இறைமை சுட்டிய தொடர்களிலும், இன்றுவரை சமயங்கள் கூறும் 'எண்குண' விளக்கங்களும், புலவர் குழந்தை கூறும் விளக்கமும் உண்மையில் வள்ளுவத்தின் மூலப்பொருள் வழிவந்த ஆனால் பண்பில் இழிந்த விளக்கங்களே என்பதை நாம் முன்கூட்டிக் குறித்தால் தவறுகாது.

'எண்' என்ற தமிழ் வேர்ச்சொல் எட்டையும் குறிக்கும்; எட்டில் குறைந்த, கூடி எல்லா 'எண்'களையும் குறிக்கும்; 'எளிமை'யைக் குறிக்கும். அது மட்டுமன்று. இரண்டாவது பொதுப்பொருளாகிய 'எண்', எண்ணாராய்ச்சியாகிய 'கணக்கிய'லையும் குறிக்கும். கணக்கியல்' என்ற சொல்லின் பழைய பொருளைப் போலவே, அது எல்லா அறிவியலையும் பொதுவாகக் குறித்து, இன்றைய அறிவுநூல், இயல்நூல் விஞ்ஞானம் (Science) ஆகிய பொருள்களும் உடையது. இன்று விஞ்ஞானத்தின் விஞ்

— அடுத்த பக்கம் —

கண்ணதாசன் நிகழ்ச்சிகள்

பிப்ரவரி 22, 23-தேவகோட்டை
,, 24 பகல்-மதுரை தியாகராசர் கல்லூரி.
,, 24 மாலை-கோம்பை.
,, 25-சென்னை.
மார்ச் 8-9 - பழனி.
,, 10-சென்னை.

மாங்குயிலே பாடு

— துறையூர் ந. அலி —

வான்பாட மண்பாட வளமரங்கள் பாட
வற்ருத தேனூற்று சுரக்கின்ற உந்தன்
தேன்குரலில் இசைபாடி மகிழ்வித்த குயிலே
தீப்பொறியை உன்குரலில் கலந்தின்று பாடு
மீளுகி முடமாகி கடவுள்கள் வந்து
மேதினியைக் காத்தார்கள் என்ருேதி, சில்லோர்
வன்ளாவப் புகழ்கின்ற புராணங்கள் வெந்து
மாயட்டும் ஓயட்டும் மாங்குயிலே பாடு!

எரிகின்ற காட்டுத்தீ உலகத்தின் வேரை
எரிக்கட்டும், பழையமரம் சாயட்டும் கீழே
சிரிக்கின்ற சிறுகுழந்தை பல்போன்ற முளைகள்
சாம்பலிலே தோன்றட்டும்; புதுஉலகம் முல்லை
விரிக்கின்ற இதழ்போல விரியட்டும் அங்கே
மனிதர்கள் தளிர்போல தோன்றட்டும் என்று
எரிகின்ற நெருப்பைஉன் இன்குரலில் சேர்த்து
இசைத்திடுவாய் எங்கெங்கும் பறந்தோடிச் சென்று

சாதிமசம் தொலையட்டும் சாக்காட்டில் வெந்து
சாகட்டும், அறியாமை மாயட்டும் மண்ணில்
வேதமென்றும் குலமென்றும் விளம்புகின்ற பழைய
வெற்றுரைகள் இல்லாமற் போகட்டும் என்று
மாதுரிய இசைப்பாட்டால் மாங்குயிலே வேண்டாம்
மலையோடு மலைமோதும் இடிக்குரலில் பாடு
தீதொழித்து நல்லநெறி நிலைநாட்ட உந்தன்
தேன்குரலில் உரத்தோடும் திறத்தோடும் பாடு!

இருள்சூழ்ந்த சிறுகுருவி கூட்டைப்போய் மக்கள்
இதயத்தில் நிறைந்திருக்கும் பழங்குருட்டுக் கருத்தை
கருங்குயிலே அகற்றிடுவாய்; கானமழை பொழிந்து
காலத்தின் நற்கருத்தை அவர்உணரச் செய்வாய்
பருந்தின்மேல் பாம்பின்மேல் பக்தியினைக் காட்டி
பார்மக்கள் தம்முள்ளே பகைவளர்த்துக் கொண்டு
அருப்பெரும்நல் வாழ்க்கையினைப் பாழாக்கிக் கொள்ளல்
அறியாமை என்ருேதி இசைக்குயிலே முழங்கு!

புதுக்குருதி ஓட்டத்தால் தளிர்போன்று உடலம்
பொலியட்டும், இளமைமணம் கமழட்டும் நன்கு
புதுமலராய்ப் பூக்கட்டும் புதுமணத்தை எங்கும்
பரப்பட்டும் புதுவாழ்வு வாழட்டும் அங்கே
"இதுஇன்பம் இதுஇன்பம்" எனக்கூறி வண்டு
இன்னிசையை முழங்கட்டும் அருந்தட்டும் தேனை
மதுமாந்தர் வண்டினமும் தேமலரும் வாழ
மாங்குயிலே மென்குரலில் வாழ்த்துப்பண் பாடு!

புவிமீது அறியாமை இருள்நீங்க வேண்டும்
புத்துலகு பகுத்தறிவு ஒளிபெறுதல் வேண்டும்
குவியாத மலர்போல மக்களுளம் விரிந்து
குவலயத்தில் பெருமகிழ்வு பெறவேண்டும், வாழ்வில்
சுவைவேண்டும் அருள்வேண்டும் நல்லன்பு வேண்டும்
சீர்திருத்த மனப்பான்மை அமைந்திருக்க வேண்டும்
இவையோடு நல்வாழ்வு நடத்துகின்ற முறையும்
எல்லோர்க்கும் வேண்டுமென்று இசைபாடு குயிலே!

காலத்தைக் கடந்துநிற்கும் கருப்பொருளே மனிதன்
கணப்பொழுதில் மறைகின்ற புற்றீசல் அல்ல
சீலத்தின் திருவுருவம் மனிதகுலம் வாழத்
திருப்பணிகள் செய்கின்ற தியாகத்தின் சிகரம்
நீலநிறக் கடலலைபோல் நொடிப்பொழுதில் தோன்றி
நீரோடு சென்றுவிடும் பொருளல்ல, இந்த
ஞாலத்தில் ஒளிவீசும் மணிவிளக்கு என்று
நாற்றிசையும் எதிரொலிக்க இசைமுழங்கு குயிலே!

இந்தியில் "பந்த்" இயற்றிய கவிதையின் உரு.

— முன் பக்கத் தொடர்ச்சி —

ஞானம் என்று கணக்கில் குறிக்கப்படுவதுபோல, பண்டு இறைவனைப் பற்றிய ஆய்வுநூல் (Theoscphy, Theology) விஞ்ஞானத்தின் விஞ்ஞானமாகக் கருதப்பட்டது. இது வள்ளுவ வழி வந்த கருத்தே என்பதை,

'கற்றதனுலாய பயனென்
கொல், வாலறிவன்
நற்ருள் தொழாஅந் எனின்'

என்ற குறட்பா சுட்டிக் காட்டும்.

இறைமை நூலையே கிழையுலகச் சமய நூலார் 'ஆகமம்' என்பர். தமிழ் அகர வரிசைகள் 'எண்' என்ற சொல்லுக்கும் 'கணக்கு' என்ற சொல்லுக்கும் ஒருங்கே அறிவுநூல், ஆகமநூல், கடவுள்நூல் ஆகிய பொருள் தருகின்றன.

பரிமேலழகர் கூறிய 'எண்குண' பட்டியல் சைவ, வைணவ ஆகமங்களிலிருந்து எடுத்தாளப்பட்டதே. புத்த சமணருக்கும் ஆகமங்கள் உண்டு. விபிலிய நூலிலும் ஒரு பகுதி ஆகமம் Revelations-கடவுள் அருள் வெளியீடு) என்ற பெயர் உடையது. குரான் ஒரு பெரும் பகுதி இப்பொருள் சுட்டும் 'அருள் வெளியீடு' என்ற பெயரேயுடையது. குரானின் ஏனைப் பகுதிகள் கடவுள் வழி நின்ற நபிநாயகம் சொற்கள்மட்டுமே, இப்பகுதி என்றே நேராகக் கடவுள் நிலைநின்ற நபிநாயகம் அவர்கள் வாயிலாகக் கடவுளே அருளியது என்பர் இஸ்லாமிய மறை ஞானியர் (சூபிகள்).

எல்லாச் சமயங்களினூடாகவும் வந்த 'எண்' 'கடவுள்பற்றிய அறிவு' என்னும் பொருளுடையது. பின்னுளில் இது 'எட்டு,' 'எளிமை என்னும் பொருள் கொண்டதாயினும். தொடக்கப் பொருள் 'எண்ணுதல்,' 'அறிவு' என்ற பொருளுடையதேயாகும்.

எண்குணத்தான் என்பதற்கு எட்டுக் குணம் என ஆகம வழிகளில் விளக்கினும், எளிய குணத்தாள் என்று பொதுவே சமய வழி நின்று அன்பு வழி குறித்து விளக்கினும், இரண்டும் வள்ளுவ வழி நின்ற பொருள்களேயாயினும், வள்ளுவத்தின் மூல முதல் உள்ளுறை பொருள் 'எண்' ஆய்ந்த அறிவு நூலறிவு என்பதே.

'எண்ணென்ப ஏனை எழுத்
தென்ப, எவ்வுயிர்க்கும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'

எண், அறிவு, அறிவு நூல். எழுத்து அன்பு, அன்பழகு நூல், கலை. அறிவு முதலான கடவுளின்றி, அன்பு முதலான, கலை முதலான வாழ்வு திறம்படாது. ஆகவே எண்குணத்தான், அறிவுருவான, அறிவுக் குறிக்கோளுருவான கடவுள் தாள் வழி தலை நின்ற உயிரே, வாழ்வில் தலைப்படும் என்பது குறட்பாவின் திரள் சுருக்கமான கருத்து என்னலாம்.

(ஆ) திருவள்ளுவர் தம் வாய்மொழி அருளிச் செய்த காலம் ஆரியர் இந்தியாவுக்கு வருகை தந்ததற்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முந்தியதென்று கொள்பவன் நான். ஆனால் அவர் கி. பி. இரண்டாம் நூற்றுண்டினர் என்று கொண்டால்கூட, அந்நாளில் தான் சமஸ்கிருதம் என்ற மொழி உருவாகி வந்தது. தமிழ்ச் சொற்களையும் ஏனைய மொழிச்சொற்களையும் குழைத்தே அது உருவாயிற்று.

'முகம்' என்ற சொல் தமிழிலும் உண்டு, சமஸ்கிருதத்திலும்உண்டு. ஆனால் தமிழில் அதற்கு உள்ள பொருள் வேறு. சமஸ்கிருதத்தில் உள்ள பொருள் வேறு. தமிழில் தலையின் முன்புறம் என்றபொருள், முகம் என்ற சொல்லால் இன்று நாம் உணரும் பொருள் உண்டு. சமஸ்கிருதத்தில் 'வாய்' என்ற பொருள்தான் உண்டு. ஆங்கிலத்தில் வாய் என்பதற்குரிய சொல் (Mouth) அதனுடன் தொடர்புடையது. ஆனல் வாய் என்ற பொருளில்கூட இச்சொல் எல்லா ஆரிய மொழிகளிலும் இல்லை. ஆகவே இந்தப் பொருளும்கூடச் சமஸ்கிருதத்திலும் பிற இந்திய ஆரிய மொழிகளிலும் திராவிட மொழிகளிலிருந்தும், ஆங்கிலத்தில் திராவிடத்துடன் பழந் தொடர்புடைய கெல்ட்டியர், ஐபீரியர் ஏதோ ஒரு பழங்குடியினரிடமிருந்தும் தான் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென்னலாம். ஏனெனில் தமிழில் கண், மூக்கு, மூஞ்சி, மோறை அல்லது முகறை, முகடு, முட்டு, முண்டு, மூக்கு, முனங்கு முதலிய சொற்களுடனும் ஆங்கிலத்திலும் முகம் கோண வைத்துக்கொண்டிரு என்ற பொருளுடைய சொல் (mope) முனகு அல்லது முணுமுணு அல்லது முருமுரு (murmur) ஆகிய சொற்களுடனும் அது தொடர்புடையது.

முகம் என்பதன் தொடர்புடைய பேர்ச் சொற் பகுதிகள் எதுவும் சமஸ்கிருதத்திலோ ஆரிய மொழிகளிலோ கிடையாது. இருக்கும் சில சொற்களும் தமிழிலிருந்து திரிபுற்றவையாகவே காணப்படுகின்றன. ஊமைக்குரிய மற்ருெரு தமிழ்ச் சொல் மூறுகை (சமஸ்கிருதம் மூக) முன், முதல், மூளை ஆகியவற்றுடன் தொடர்புடைய மூலம் (சமஸ்கிருதம் மூலம்) ஆகியன காண்க.

சமஸ்கிருதம் திருக்குறளுக்குமட்டுமல்ல, தொல்காப்பியத்துக்கும் சங்க இலக்கியத்துக்கும் பிற்பட்ட கால மொழி. சமஸ்கிருதத்துக்கு மூலமான வேத மொழிகூடத் திருக்குறளுக்கும் தொல்காப்பியத்துக்கும் பிற்பட்டதே என்பது எம் கருத்து. ஆனல் வேத மொழியில் கூடத் திராவிடச் சொற்கள்—தெலுங்குச் சொற்களே கலந்துள்ளன என்பர். தெலுங்குப் பேராசிரியர் இராமகிருஷ்ணையா என்பவர். பல தமிழ்ச் சொற்கள் சமஸ்கிருதத்தில் எழுத்துத் திரிந்து காணப்படுவதற்குரிய காரணம் அவை தெலுங்கு, கன்னட மூலமாகவோ, வடநாட்டு பானி மொழி மூலமாகவோ சமஸ்கிருதத்தில் புகுந்தவைதான். இதை வகுப்பில் ஆராய்ச்சி இன்று தெளிவாகியதைவிட மிகவும் விரிவுபடத் தெளிவாக்கக் கூடும். சேரலன் கன்னடமூலமாகக் கேரளன் ஆனதை டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் எடுத்துக் காட்டியுள்ளனர். 'மதி' (கதில்கள்) என்ற சொல்லுடன் தொடர்புடையமாதம் பேச்சு வழக்கில் மாசமாகி, அந்த வடிவிலேயே சமஸ்கிருதத்தில் இடம் பெற்றுவிட்டது! மதி என்ற சொல்லுக்குத் திங்கள் என்ற பெயரோ, 'மாதம்' என்ற சொல்லுக்கு வேறு வேர்ச் சொல் விளக்கமோ சமஸ்கிருதத்தில் கிடையாது. ஆரிய இனமொழி ஒப்புமையாவர் வேண்டுமானல் இலத்தினம் 'மேன்ஸ்–மேந்திஸ்' ஆங்கிலத்தின் 'முன்' என்ற சொல்லுடன் தொடர்புடையதென்று கூறலாம். ஆனல் துரதிருஷ்டமாக இங்கும் தமிழ் முதன்மையே வலியுறுத்தப்படுகிறது. ஏனென்ருல் 'மூன்' என்ற சொல் தமிழ் 'மதி'யுடனும் மூமுகில், என்பதனுடனும்தான் தொடர்புடையது. இலத்தின்மொழியில் திங்களின் பெயர் (Luna) அத்தொடர்பற்றது. ★

— 6ம் பக்கத் தொடர்ச்சி —

நிறுத்தினார். என் மனம் துடித்தது. கணவர்மீது கடுங்கோபம் எழுந்தது. சீற்றத்தை அடக்கமுடியவில்லை.

கமலி : "இவரா அப்படிச் சொன்னார் ?" என்று கேட்டாள் கலா.

"ஆமாம் கலா; இது மட்டுமல்ல; இன்னும் எவ்வளவோ சொன்னார். ஆனால் இதற்காக நீ அவரிடம் சினங்கொள்ளக்கூடாது. அலட்சியமாக நடந்துகொள்ளக்கூடாது. எவரிடமும் கூறாத என் கதையை உன்னிடம் ஒரு குறிப்பான நோக்கத்துடனே கூறுகிறேன். ஏழைக்கு ஏழையின் தொல்லை தெரியும். துன்பப்பட்டவர்க்குத் துன்பப்படுவோரின் துயரம் தெரியும். ஆகவே புக்ககத்தில் புகுந்து துயருறும் உனக்கு என் துன்பக் கதையைக் கூறினால் என் துன்பம் எத்தகையது என்பதை நீயறிவாய்.என் உள்ளத்தில் அதனால் சிறிது ஆறுதல் ஏற்படும். மேலும் மாமியார் சினந்து கொள்கிறார் என்பதற்காக வருத்தப்படும் நீ, எனது எல்லையற்ற துன்பத்தை நினைவுப் படுத்திக்கொண்டால் 'பூ, என் துன்பம் எம்மாத்திரம் !' என உதறித் தள்ளி வாழ்க்கையில் இன்பம் காணலாம். இந்த ஒரே எண்ணத்துடன் தான் நான் என் கதையைச் சொல்கிறேன். மாறாக என் கதையினால் நீ உன் கணவரிடம் அலட்சியமாகவோ கடுமையாகவோ நடந்துகொண்டால் உன் வாழ்வில் வளம் காணமுடியாது. என் குறிக்கோளின் ஆணிவேரையே பிடுங்கி எறிந்ததாகும். என்ன சொல்கிறாய் ?"

"இல்லை, இல்லை. அவரிடம் எப்போதும் போலவே நான் நடந்து கொள்வேன். மேலே சொல்லுங்கள்" என்று தூண்டினாள் அவள்.

கலா ! கதையைக் கேள்: பெற்றோர் சம்மதமின்றியே நாங்கள் பதிவுத்திருமணம் செய்துகொண்டோம். உடனே என் கணவரது சொந்த ஊருக்குப் போய்விட்டோம். அங்கே ஒரு பள்ளியில் அவருக்கு வேலை கிடைத்தது. இன்பமாகக் கடந்தன நாட்கள். எங்களிருவருக்கும் இசை என்றால் உயிர். இருவரும் வீணை மீட்டிப் பாடத் தொடங்கினால் உலகை மறந்துவிடுவோம். வாழ்க்கையில் வெற்றி கண்டுவிட்டோம் என இறுமாந்தேன் நான். என்போல் வாழ்க்கையில் மகிழ்ச்சியுடன் இருப்பார் யார் என்று பெருமிதமடைந்தேன். ஆனால் இந்த இறுமாப்பு, பெருமிதம் எல்லாம் மிக விரைவிலே தவிடுபொடியாகும் நிலை ஏற்பட்டது. கலா ! திருமணமான மூன்றாவது மாதமே மாரடைப்பினால் என் கணவர் என்னைப் பிரிந்து சென்றுவிட்டார் !..."

கலாவின் கண்களில் கண்ணீர் எட்டிப்பார்த்தது. ஆறாகப் பெருகிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மீண்டும் தொடர்ந்தேன்.

"கலா ! என் வாழ்விலே இடி விழுந்துவிட்டது. இதை அறிந்த என் பெற்றோர் தம் கடமையை உணர்ந்து கொண்டு என்னை அழைத்துப் போக வந்தனர். உள்ளத்தில் உண்மையான அன்பு ஊறுவிட்டாலும் ஊர் வாய்க்கு அஞ்சியே என்னை அழைத்து வந்தார்கள். ஆனால் என்னை அழைத்து வந்ததும் ஊர் வேறு விதமாகப் பேசியது; 'சாதிகெட்ட பெண்ணை வீட்டில் வைத்திருக்கிறார்களே !' என ஏசியது. அதன் பிறகு நான் வாழ்க்கையில் கண்டது துன்பம், துன்பம், துன்பந்தான் ! எந்த வீட்டின் வாசற்படியில் ஏற நினைக்க வேண்டாமென்று கூறப்பட்டதோ அதே வீட்டில் வாழ்ந்து கொண்டும் யாருடைய முகத்தில் விழிக்க வேண்டாம் என்று சொல்லப்பட்டதோ அதே முகத்தை நாள் தோறும் பார்த்துக் கொண்டும் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது ."

கலா : மனம் நொந்த நிலையில் அக்கா ஏதேதோ பேசிக்கொண்டேயிருந்தார். பிற்பகல் மணி மூன்றடித்துவிட்டது. காப்பி-சிற்றுண்டி செய்தாக வேண்டுமே ! அக்காவின் கதையை விட்டு விட்டுக் கீழே ஓடினேன்.

கீழே மாமியார் அப்போதுதான் எழுந்து கண்களைக் கசக்கிக்கொண்டிருந்தார். நான் சரசரவென்று உள்ளே சென்று அடுப்பைப் பற்ற வைத்தேன். காபி போட்டுச் சிற்றுண்டியும் செய்தேன். மாமியார் - மாமனாருக்குக் கொடுத்துவிட்டு அக்காவுக்குக் கொடுப்பதற்காகக் கையில் எடுத்தபோது "தினமும் என்ன, மகாராணியைப்போல மாடியிலே கொண்டுபோய்க் கொடுப்பது ? கீழேதான் வரட்டுமே, கொஞ்சம் கருணை வைத்து !" என்று கடுமையாகக் கூறினார் மாமியார், நேற்று என் மீதிருந்த சினம் இன்று மகளின்மீது திரும்பிவிட்டது போலிருக்கிறது. இவர் மகளை வைத்துக் கொண்டிருக்கும் அழகுக்கு, ஒரு நாள் காபி குடிக்காவிட்டால்தான் என்ன ? மானமுள்ள பெண்ணாயிருந்தால் அக்கா கீழே வரமாட்டார் !

ஆனால், என்ன விந்தை ! நான்கு மணியாகியும் காபி வராமற் போகவே அக்கா கீழே இறங்கி வந்தார். ஆம்; இந்த மாமியாரின் இயல்பு எனக்கே தெரிந்திருக்கும்போது அக்காவுக்கா தெரியாது ? கீழே வராவிட்டால் அதைப் பெரிய குற்றமாக்கி ஒரு 'ஆட்டம்' ஆடிவிடுவார். அதற்கு அஞ்சித்தான் பாவம், கீழே வந்திருக்கிறார் !

சமையல் அறையிலேயே ஒரு இடத்தில் அக்கா அமர நான் ஏற்பாடு செய்வதைப் பார்த்து மாமியார், "அவள் சமையல் அறைக்கு வரக் கூடாது அம்மா. புறக்கடைக்குப் போகும் வழியில் உள்ள ரேழியில் கொண்டுபோய் வை" என்றார். நான் அவற்றை எடுத்துக்கொண்டு புறக்கடைப் பக்கம் சென்றபோது அங்கே முன்னரே அக்கா அமர்ந்திருந்த காட்சி என் நெஞ்சை என்னவோ செய்தது. காப்பியையும் சிற்றுண்டியையும் அவர் எதிரில் வைத்து விட்டு அவர் முகத்தை நோக்கினேன். எவ்வித மாற்றமுமற்ற அவரது முகத்தில் ஒரு உயிரற்ற புன்னகை ஒளிவிட்டது.

மாலையில் மாமனாரும் மாமியாரும் யாரோ தெரிந்தவர்களைக் காணச் சென்றனர். என் கணவர் அலுவலகத்திலிருந்து ஏழு மணிக்குத்தான் வருவார். ஆகவேஅக்காவைக் காண மாடிக்குச் சென்றேன்.

மதியை வரவேற்கக் காத்திருப்பதுபோல் வானத்தைப் பார்த்தபடி நின்றிருந்தார் அக்கா. பிற்பகல் நிகழ்ந்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்தது. வாய், சொற்களைக் கொட்டியது; "இந்த நரகத்தில் எப்படி வாழ்கிறீர்கள் அக்கா ? இன்று அம்மா உங்களை எவ்வளவு கேவலமாக நடத்தினார்கள் ! உங்கள் நெஞ்சு வெடிக்கவில்லையா ?"

கமலி : எனக்குச் சிரிப்பு வந்தது. நெஞ்சு வெடித்திருந்தால் இப்படி உயிரோடு நிற்பேனா ?

"இதெல்லாம் எனக்குப் பழக்கமாகிவிட்டது கலா,பிறந்தகத்திற்குத் திரும்பி வந்த புதிதில் அம்மாவுக்கு உதவியாக இருக்கலாமென்று சமையல் அறையில் நுழைந்தேன். அப்போது அம்மா வீசிய கடுஞ் சொற்கள் !...அம்மம்ம ! இப்போது நினைத்தாலும் நெஞ்சம் பதைக்கிறது. 'சமையல் அறையில் நுழையாதே. நீ சாதி கெட்டவள். நீ தொட்ட உணவைச் சாப்பிட்டால் எங்கள் 'ஆசாரம்' கெட்டுப் போகும், எங்கள் விரதம் வீணாகப் போகும். அந்தத் தாழ்ந்த சாதிக்காரனை மணந்து கொள்ளும்போது வீம்பாகப் பேசினாயே, இப்போது எங்களிடமே வந்து இருக்க வேண்டி வந்தது பார்...'என்றெல்லாம் பேசிக்கொண்டேயிருந்தார். பெற்ற தாயின் வாயிலிருந்து இத்தகைய கடுஞ் சொற்களைக் கேட்ட எனக்கு நீ கூறியது போல் நெஞ்சு வெடித்துவிடும் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. சாதி வேறுபாடு என்பதுபாசத்தைக்கூடக் கொன்றுவிடும் போலும். நாள் கணக்கில் அழுதுகொண்டிருந்தேன். சமையல்வேலையில் தலையிடுவதை நிறுத்திக் கொண்டதும் அம்மாவின் மனநிறைவுக்காக வெளி வேலைகள் அத்தனையும்நானே செய்யத் தொடங்கினேன். அப்படியும் அம்மாவின் சினம் தணியவில்லை. எதற்கெடுத்தாலும் குற்றம் கண்டுபிடித்து வசை புராணம் படிக்கத் தொடங்குவார். அப்பாவோ ஒரு வாயில்லாப் பூச்சி. அவ்வளவையும் பார்த்துக்கொண்டு வாயை மூடிக் கொண்டு இருப்பார். ஆனால் நாளாக ஆக எனக்கு இதெல்லாம் பழகிவிட்டது. நெஞ்சு மரத்துவிட்டது.

அண்ணாவுக்கு என்மீது வேறு விதத்தில் வெறுப்பு. அவருக்குப் பெண் கொடுக்க வந்தவர்கள் என்னைப் பற்றிக் கேள்விப்பட்டதும் சாதி கெட்டவர்களுடைய தொடர்பு வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். நாங்கள் அடுத்த ஊருக்குச் சென்றோம். அங்கும் என் கதை எப்படியோ பரவி அண்ணாவின் திருமணத்திற்குத் தடையாய் நின்றது. ஆகவே கிராமாந்திரத் தொடர்பே வேண்டாம் என்று இந்தப் பட்டணத்திற்கு வந்தோம். இங்கே வந்த பிறகுதான் உன்னை அண்ணாவுக்குக் கொடுக்கப் பேச்சுவார்த்தை நடந்தது. எங்கே இந்த இடமும் நழுவி விடுமோ என்ற அச்சம் கொண்டுதான் என்னைப் பற்றிய செய்திகளை ஒரேயடியாக மூடி மறைத்துவிட்டார்கள்." கதையை நிறுத்திவிட்டு வானத்தை நோக்கினேன்.

கலா : கிழ்த்திசையிலிருந்து முழு மதி எட்டிப் பார்த்துச் சிரித்தது. அக்கா தொடர்ந்தார் :

"கலா ! இவ்வூருக்கு வந்தபோது என் கவலையைச் சற்று மறப்பதற்காக இவ்வூரிலுள்ள 'எளியோர் தொண்டுக் கழக'த்தில் சேர்ந்தேன். ஏழைகளுக்குச் செய்யும் தொண்டில் இன்பம் கண்டேன். ஆனால் அந்த இன்பத்திற்கும் வந்து சேர்ந்ததொரு இடையூறு. என் பணிகளைப் பாராட்டி என்னைப் பெண்கள் பகுதிக்குச் செயலாளராக அமைத்தார்கள். ஆண்கள் பகுதியின் செயலாளர் நடராசன் என்ற இளைஞர்; மாசற்ற மனதுடையவர். கழகத்தின் ஆக்க வேலைகள் காரணமாக எனக்கும் அவருக்கும் தொடர்பு ஏற்பட்டது. அவ்வேலைகள் குறித்துப் பேச அவர் சிலபோது வீட்டுக்கும் வரத் தொடங்கினார். இந்தப் பொல்லாத ஊர், அந்தக் கள்ளமில்லாத உள்ளத்தவரை-பண்புள்ள தூய தொண்டரை-என்னுடன் சேர்த்து அபாண்டமான கதை கட்டத் தொடங்கியது. வீட்டில் ஒரு விதத் தொல்லை என்றால் வெளியே இன்னொரு விதத் தொல்லை. அண்ணாவும் வற்புறுத்திக் கூறவே கழகத்திலிருந்து விலகிவிட்டேன். நீ இங்கு வந்த புதிதில் நான் அங்கேதான் போய்க்கொண்டிருந்தேன். அண்ணா ஒருவரும் அறியாதபடி இரகசியமாகக் கண்டித்தார். கழகத்திற்குப் போவதும் நின்றுவிடவே வீட்டு வேலை முழுவதையும் செய்த பிறகு என் அறையில் கிடந்து என் மன உணர்ச்சிகளைப் பேனாவின்மூலம் தாளில் கொட்டிக் கொண்டிருக்கிறேன்."

தன் சோகக் கதையை முடித்து விட்டு வானத்தை நோக்கிப் பெருமூச்சு விட்டார் அக்கா.

சிறிது நேரத்திற்குப்பின் என் கணவர் வந்தார். வந்ததும் வராததுமாக அவர் என்னிடம், "கலா ! ஒரு நல்ல செய்தி !" என்றார். மன உணர்ச்சிகளை வெளியே காட்டாமல் "என்ன ?"என்றேன் நான் "மாற்றல் கேட்டுக்கொண்டேயிருந்தேன், இப்போது தில்லிக்கு மாற்றல் கிடைத்து விட்டது. அம்மா திட்டுகிறார்கள் என்று வருத்தப்பட்டுக்கொண்டாயே இனி உன்னைக் கேட்பார் யார் ? தனிக்காட்டு அரசியாக ஆட்சி நடத்தலாம்" என்று உவகை பொங்கக் கூறினார்.

கணவருடன் தனிக் குடித்தனம் நடத்தப்போகிறோம் என்ற மகிழ்ச்சியுடன் கூடவே அக்காவைப் பிரிய வேண்டுமே என்ற வருத்தமும் தோன்றியது. கொடுங்கோலரிடமிருந்து விடுதலை பெறப் போகிறோம் என்ற களிப்பைவிட அக்காவை இந்தக் கொடுமையானவர்களிடம் விட்டுவிட்டுப் போகிறோமே என்ற வேதனையே மிகுதியாக இருந்தது. அக்காவையும் தில்லிக்கு அழைத்துப் போனால்...? கணவர் உடன்பட வேண்டுமே ? ஒரு நாள்அக்காவைப் பற்றி ஏதோ பேச்செடுப்பதற்குள் என் கணவர், 'உன் அக்காவைப் பற்றி என்னிடம் பேசாதே' என்று ஒரேயடியாக அடக்கிவிட்டார். என் ஆத்திரமெல்லாம் குமுறிக்கொண்டு வந்தது. ஆனால் சட்டென அக்காவின் அறிவுரை நினைவுக்கு வரவே அடக்கிக்கொண்டேன். அன்றுடன் அக்காவைப்பற்றிப் பேசும் எண்ணத்தைக் கை விட்டுவிட்டேன்.

ஊருக்குச் செல்லும் செய்தியை அக்காவிடம் கூறியபோது முதலில் திடுக்கிட்டார். பிறகு சமாளித்துக் கொண்டு, "மிக்க மகிழ்ச்சி கலா. நீங்கள் இருவரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பதே என் விருப்பம்" என்றார்.

கமலி : அந்த நாளும் வந்தது. என்னிடம் விடை பெற்றுக்கொள்ள வந்த கலா, என் கைகளைப் பற்றிக் கொண்டு கண்ணீர்விட்டாள். நானும் கண்ணீர் பெருக்கினேன். இருவரது கண்ணீரும் ஒன்று கலந்தது. ஆம்; கண்ணீருக்கென்ன தெரியும் சாதி வேற்றுமையைப்பற்றி ! முதலியார் சாதியாருடன் உறவுகொண்ட என் கண்ணீருடன் பார்ப்பனச் சாதியைச் சேர்ந்த கலாவின் கண்ணீர் கலந்தால், கலா 'அசுத்த'மடைந்துவிடுவாள் என்பது கண்ணீருக்குத் தெரியுமா ?

கலா போய்விட்டாள், தன் புது வாழ்வைத் தொடங்க. என்உயிரற்ற வாழ்க்கைக்கு உற்ற துணை இனி யாருமில்லை. ஓ, முழு மதியே ! நீ பல்லாண்டு காலமாக இப்புவியைப் பார்த்து வருகிறாயே, 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று பேசியிருந்த என்னரும் தமிழ்நாட்டில் இத்துணை சாதிகள் தோன்றியதெப்போது ? திருமணத்திற்கு மனப் பொருத்தமே முதன்மையானதாயிருக்க, சாதிப் பொருத்தம், சாதகப் பொருத்தம் முதலியவை தோன்றிக் காதலைக் கொல்லத் தொடங்கியது எப்போது முதல் ? அன்பே அகமாகக் கொண்டிருந்த என் பொன்னாட்டில் பாசத்தைக்கூட அழித்துவிடுமளவுக்கு சாதி வெறி வளர்ந்துவிட்டது எப்படி ? நல்ல நாடாம் என் தமிழ் நாடு புல்லர்களின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டதேன் ? ஏன் ? ★

வெண்பாப் போட்டி

10. மேயப் புகுந்த விதம்.

பாழும் பரத்தையைப் பண்புள்ள பெண்ணென்று
நாளும் அவர்பாதம் நாடிடுவார்;-தோழா, கேள் !
கூழைக் கனியென்பார்; கண்மறைக்கும் காமத்தில்
மேயப் புகுந்த விதம்.

—நாதமுனி, திருவண்ணாமலை.

❁

நல்லறிவும் சிந்தனையும் நாமொதுக்கி, மேலுலகும்
வல்விதியு மென்றெண்ணி வாழ்ந்தநிலை-அல்லவோ
மாயப் பலமதங்கள் மாண்புமிகு நம்நாட்டில்
மேயப் புகுந்த விதம்.

—ந. ஜாபர், சித்தயங்கோட்டை.

❁

கூவிடும் சேவலினைக் கூடைக்குள் போட்டிட்டால்
மேவிடா ஞாயிறென்ற மேதைபோல்-காவலிட்டார்
சீயத் திராவிடரை ! சீ! இதுவோ 'மாடு'ஆட்சி
மேயப் புகுந்த விதம்.

—பால. பழனிச்செல்வன், இராயகிரி.

❁

வாயிருந்தும் ஊமை வளமற்ற புண்ணுடம்பு
தேய்பிறையை வெல்லும் செழும்வளர்ச்சி-ஆயஇந்தி
நாயும் அரசாமோ ? நாகாவீர் ! விட்டிடுங்கள்
மேயப் புகுந்த விதம்.

—ப. கணபதி, சோழபுரம்.

❁

தங்கத் தமிழிருக்க சீர்கெட்ட இந்தியேன் ?
அங்கம் துடிக்குதையோ ! அன்பனே-நன்குநீ
ஆயப் புகுந்தா லறிவாய் இழிஇந்தி
மேயப் புகுந்த விதம்.

—கி. கண்ணன், திருபுவனம்.

❁

ஏய்த்துப் பிழைக்கும் எருதை அடித்தேநீர்
சாய்க்காது விட்டுவிடச் சம்மதித்தீர்-போய்ப்பாரும்
ஓயப் புடைத்ததனை ஓட்டாத காரணத்தால்
மேயப் புகுந்த விதம்.

—"பழனிராதா", கும்பகோணம்.

❁

ஆட்சியெனும் ஆள்கொண்டு அற்ப மொழிக்குதிரை
மாட்சியுடை வெங்களிற்றைத் தாக்கல்போல்-நீட்சியுடை
கேயமொழி ஆங்கிலத்தை நேற்றைய இந்திமொழி
மேயப் புகுந்த விதம்.

—த. நடராசன், காமாட்சிபுரம்.

❁

தூய்புலத்தில் தெள்ளுதமிழ் தொல்புகழோ டன்றுநிதம்
சேய்புலத்தார் போற்றிடவே சீர்பெற்ருள்-காய்ந்துவரும்
இந்திக்கு இந்நாடா மேயுமிடம்? என்னவிதம்
மேயப் புகுந்த விதம்.

—ஓடை. இரா. வடிவேலன், பேரோடு.

❁

நாட்டின் மொழியை நசுக்கிப் பிறகங்கே
நாட்டுவார் தன்னுட்சி நாட்டமுடன் !-ஏட்டினிலே
தோயும் கதையிங்கே சொல்லுதுபார் வந்தவர்கள்
மேயப் புகுந்த விதம்.

—சோ. கண்ணப்பன், பேரூர்.

❁

உண்ண உணவும் ஒதுங்கப் புகலிடமும்
நண்ணும் திரவிடநன் னுட்டகத்தென்-றெண்ணியன்ருே
ஆயத் தொடுவந்த அந்நிய மந்தையிங்கே
மேயப் புகுந்த விதம்.

—கவிஞர் அ. ச. மூர்த்தி, கோவை.

❁

கற்கண்டே நல்லமுதே ! காதலியே ! என்மனது
நிற்காமல் நின்நினைவில் நீந்துதடி !-சொல்லிடுவாய்
காயாத என்னுடைய காதற் பயிரைநீ
மேயப் புகுந்த விதம்.

—பொ. ந. கலியபெருமாள், வடலூர்.

❁

பார்க்கும் பொருளெல்லாம் பாவையாள் பொன்னுருவம்
ஆர்க்கும் கடலாக வாயிற்றே-யார்நவில்வார்
ஆய வுணவளிக்கு மன்னவ ளென்நெஞ்சில்
மேயப் புகுந்த விதம்.

—பசுமலைவீர. முருகேசன், மதுரை.

❁

சந்தியிலே கூத்தாடிப் பந்தியிலே பாய்விரிக்க
முந்துகிருய் வந்தவளே சொந்தமறு !-குந்திடில்
தூயதமிழ் வாளெடுத்துச் சூளுரைத்தே கூறுவோம்நீ
மேயப் புகுந்த விதம்.

—தே. ஹேரிஸ் ஹில்டன், தாழையூத்து.

❁

வீட்டார் விழித்திருக்க வேற்ருெருவன் சென்றுங்கே
தட்டிப் பொருள்பறிக்கும் தன்மைத்தாம் !-மட்டில்லா
தூயதமிழ் நாட்டில் துவள்மொழி யாம் இந்தி
மேயப் புகுந்த விதம்.

—செ. சீனிவாசன், சலகண்டபுரம்.

❁

முந்தித் தமிழ்நாட்டில் மூக்கறுந்த இந்தியே
பிந்தி நுழைய விழைகுவதோ-விந்தையே
ஆயும் குணமற்ற ஆள்வார்கள் தாமிருக்க
மேயப் புகுந்த விதம்.

—"சைத்தூன்", பள்ளபட்டி.

❁

பொய்யால் நிலைமூடும் போக்கற்ருேர் ஆட்சியிலே
உய்யும் வகைஇனியும் உண்டெனிலோ-கையிரண்டும்
ஓயப் புடைத்தே ஒழிப்போம்இந் திக்கழுதை
மேயப் புகுந்த விதம்.

—கா. குருசாமி, கோ. அழகாபுரி.

❁

செந்தமிழும் சீர்கலையும் செய்யறமும் திம்பண்பும்
வெந்ததுபோல் காண்கின்ற விந்தையெலாம்-வந்தவர்க்கே
ஈயும் தமிழகத்தில் இந்திக் கழுதைகள்தான்
மேயப் புகுந்த விதம்.

—சந்தானம், கணேசபுரம்.

❁

தேனொழுகும் தீந்தமிழைத் தீமொழியால் திட்டிட்டோர்
கோனிழந்து கல்சுமந்து கோழையராய்-ஆனதுபோல்
வாயடைக்க வைத்துவிடும் நேருநம் தாயகத்தில்
மேயப் புகுந்த விதம்.

—கீழ்குளம் தங்கராஜ், ஆம்பூர்.

❁

வேலையில்லை சோறுமில்லை வேறுவழி சென்றுசிறைச்
சாலை புகுந்தேன், சபிப்போரே !-கேளுங்கள்
தீயபசி தூண்டுதலே தோட்டத்துத் தீங்கனியை
மேயப் புகுந்த விதம்.

—வெ. வேங்கடசாமி, பாளையம்பட்டி.

❁

எண்ணம் இனிக்கும் எழிலும்தான் கூடிடுமே
என்றன் மனத்துன்பம் ஏகுமடீ-எண்ணுங்கால்
மாயமிகு கண்கள் மணவாளன் மேனியிலே
மேயப் புகுந்த விதம்.

—சா. சதாசிவம், உப்புப்பாளையம்.

முல்லை
பிப்ரவரி இதழ்
விற்பனையாகிறது !

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.
PRO:- A. தங்குமீன்ஸா, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : சுப. அருணுசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு